தென்மொழி

தமிழ்க்கெடுப்பாளைக்கெடுப்பான் தமிழைக் காப்பான்!

தரங்குறைந்த எழுத்தெழுதிப்
பணந்திரட்டும் நோக்கத்தால்
தாள் தொடங்குகின்றார், இங்கே!
உரங்குலைந்த உள்ளத்தார்—
நரம்பிளைத்த உடலத்தார்—
வெற்றுணர்வால் ஓடோடிப்போய்.
குரங்கினம்போல் தாவியதை
வாங்கி, அறைத் தாழடைத்துத்
தனிப்படித்து விடாய்தணிப்பார்!
இரங்குகின்றோம்! ஓ! ஓ! ஓ!
இளைஞர்களே! இளைஞைகளே!
வாழ்வென்பதிதுவே தானோ?

கயமையினை எழுத்தாக்கிக்
கற்பிழப்பைப் கதையாக்கிக்
காமத்தைக் கடையில் விற்கும்
நயமில்லா இப்போக்கை—
முள்மரத்தை—நந்தமிழர்
முளையினிலே நசுக்கல் வேண்டும்!
வயமிழக்கச் செய்கின்ற
இந்நோய்க்கு வாய்த்தநறு
மருந்தேசெந் தமிழ்மருந்தாம்!
கயமையினைத் தமிழெழுத்தால்
விலைபோக்கும் தமிழ்க்கெடுப்பா
ளைக்கெடுப்பான் தமிழைக் காப்பான்!

சுவடி: 14.
ஓலை: 8-9.
விலை: உரு 1.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

நமக்கு வந்த மடல்கள்.

0:559: திருமலி பாவலரேறு அவர்களே, திறல் மிகுந்த யானைக்கு ஒரு சிற்றெறும்பு தீட்டும் மடல். இனிய நல்வணக்கம். இருபது அகவை நடக்கும் இளந்தமிழனாகிய நான், என் பதினெட்டாம் அகவையில் தென்மொழி, தமிழ்ச்சிட்டு படிக்கத் தொடங்கினேன்; தனித்தமிழ் ஆர்வம் உற்றேன்; தமிழ்மேல் தண்டாக் காதலுற்றேன்.

அந்நாள் முதல் தனித்தமிழில் பேசியும் எழுதியும் வருகின்ற எனக்கு, அத்துறையில் ஆசிரியரையும் பேராசிரியர்களையும் நாடினேன்; அவர்களின் நல்லுதவிகளையும் பெற்றேன். இன்று அகத்தில் உணர்வும் புறத்தில் எழுச்சியும் பூண்டு நிற்கும் ஒரு மறத் தமிழனாக உள்ளேன். தென்மொழி தமிழ்ச்சிட்டு—இரண்டின் வரவும் நின்றுபோன காலத்தில் பழைய இதழ்கள் யாவற்றையும் நண்பர்களிடம் இருந்து வாங்கிப் படித்தறித்தேன். அவற்றில் தாங்கள் எழுதிய எழுத்துகள் என் உடல் குருதியைச் சூடேற்றுவனவும், நரம்புகளை முறுக்கேற்றுவனவாகவுமே இருந்தன.

—ப. பாவாணன். புதுவை–10.

0:560: பாவேந்தன் பாரதிதாசனுக்குப்பின் தமிழுக்கும், தமிழினத்திற்கும் ஏற்றத்தை நல்கும் ஏந்தலே! தென்மொழியே தென்னவனின் விழிப்பிற்கு நன்மொழியாம். நலிந்துள்ள மக்களின் நரம்பிலே தன் மானத்தின் தணல் ஏற்றித் தமிழுரிமை வேண்டித் தருக்கராம் வடவரின் ஆட்சியை வீழ்ச்சி செய்து, அமிழ்தாம் தமிழ் தன்னரசுடன் திகழ, தமிழன்னை அரியணையில் பொலிவுற்று அமர்ந்திருக்க, அயராது உழைத்து வரும் தங்களுக்குத் தமிழ் குமுகாயம் தமிழ் என்னும் பேருணர்ச்சி பெற்று, நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளது.

—கி. பாண்டுரங்கன். கீழ்ப்பெண்ணாத்தூர்.

0:561 அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, "இலங்கைத் தமிழர் பக்கம்" கட்டுரையின் முதற்பகுதி மனதை உருக்குவதாயும் பிற்பகுதி எழுச்சி மிக்கதாயும் அமைந்துள்ளது. அக்கட்டுரையில் தாங்கள் குறிப்பிட்டுள்ள வரிகள் என் போன்ற தமிழர்களின் மான உணர்வைத் தூண்டுவதாய் அமைந்துள்ளது. இக்கட்டுரை இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமின்றிச் சிந்திக்கும் திறனை மறந்திருந்த நம் இந்தியத் தமிழர்களுக்கும் பொருந்துவதாய் அமைந்தது பாராட்டத்தக்கது,

—ஏ. குலசேகரன், நெய்வேலி–3.

0:562: தனித்தமிழ்க் காவலர் பாவலரேறு ஐயா; கனிந்த கைக்கூப்பு. தங்களது ஆசிரிய உரை (சு. 14 ஒ. 6) இம்மண்ணின் இன உணர்வு உணராத மாந்தனுக்கும் உணர்த்தவும், உணர்ந்த மாந்தனின் ஒத்துழைப்பின்மையும் உணர்த்தி உள்ளுணர்வால் ஒரு நிலையாக்கி இன உணர்வால் உய்ய வழி வகையாக்குமென்பதில் ஐயமில்லை. இன்று உணர்ச்சி மிகுந்த, உணர்வு மிகுந்த தங்களது ஆசிரிய உரைகளும் பாக்களுமே இம்மண்ணிற்கும், வெளி நிலங்களில் போராடி வாழும் தமிழ் இனத்திற்கும் மிகமிக ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளித்திடும் என்பதை உறுதியாக எதிர்நோக்கலாம். அன்பு வணக்கங்கள். —வரகனேரி. சா. நாவரசன், திருச்சிராப்பள்ளி.

0.563: பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு, வணக்கங்கள். நளித் திங்கள் க, உ, ந ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற

(தொடர்ச்சி அட்டை 3–ஆம் பக்கம் பார்க்க)

ஆடிய வன்புயல்!

வானங் கருத்தது; வையம் இருண்டது;
வாரி யெனுந்தட நீர்அலை கொண்டது!
தானென் செருக்குடன் தண்கடல் சீய்த்தொரு
தாண்டவச் சூறைவான் காவி யெழுந்தது!
காணும் படுவன் களிற்றினம் யாவுமே
காழ்நடை ஆர்ப்பொடு சாய்த்திவண் வந்ததாய்க்
கூனம் படுநெடுங் குன்றுங் குலுங்கிடக்
கொல்புயல் பேய்ப்படை கொண்டெதிர் ஆர்த்ததே!

ஆர்த்தது வான்புயல்! ஆர்த்தது நீள்கடல்!
ஆவெனும் ஓலத் தெழுந்தது பேரலை!
போர்த்தது நீர்த்திரை! பொங்கிச் சுழன்றது!
போய்வரு மீன்பிடி புன்மைப் படகுகள்
நீர்த்துமி தாண்டவத் துட்பொடி யாயின!
நீண்ட நெடுங்கரை நின்ற மரக்கலஞ்
சூர்த்த பெரும்புயற் சூறைச் சுழியிடைச்
சுக்குநூ றாகிச் சுருண்டன நீருளே!

கண்ணை யளாவிப் பறித்தொளி மின்னிடக்
காதை யளாவிக் கிழித்திடி மேல்விழ
விண்ணை யளாவித் திமிர்ந்தெழு வான்புயல்
வேகம் அளாவிச் சுழன்றெதிர் வீசிட
எண்ணை யளாவிய தென்னை,வா ழைக்குலம்
ஏந்துபூம் பிஞ்சுகா யோடெழு மாவினம்
மண்ணை யளாவிட மாமலை போலெழு
மந்திர ஆழிமுன் மக்களென் செய்வரோ?

பாய்புனல் காய்கனி பூமரம் பாவிட
பாற்கதிர் சாய்வயல் பாறுமண் மேடிட
வேய்குடில் நூறுநூ றாயிரம் நூறிட
வீறிடும் செம்புனல் வீழ்கரை மீறிட
காய்வயி றோடுழல் ஏழையர் கையற
காலப் பெரும்புன லோடு கலந்துகால்
வாய்வழி யோடி வயல்வெளி மாறிய
வன்பிணக் காட்டிடை ஆடிய வன்புயல்!

ஆடிய வன்புயற் கந்தமிழ் நாடுமிங்
காந்திர முங்கள மாகி அதிர்ந்தன!
வாடிய மக்களுக் காறுதல் வாய்மொழி
வாழ்க்கை யுதவிகள் பற்பல வாய்க்கினும்
நாடிந லம்புந டுக்கந் தவிர்க்குமோ?
நற்றுணை மாண்ட குழந்தையர் நங்கையர்
நீடிய வெந்துயர் நீங்கிடக் கூடுமோ?
நீண்ட நெடுங்கட லேவிடை சொல்கவே!

(திசம்பர்'7.8 'செந்தமிழ்ச் செல்வி'யில் வந்தது)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

சுவடி : 14 ஓலை : 8-9.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

இலக்கிய இதழ்

சிலை-சுறா தி. பி. உ00க-திசம்-சன-1978.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்.

ஆசிரியர் : மா. பூங்குன்றன். அறி.இ, (க.மு.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும். பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன,]

உழைப்பும் ஊதாரித்தனமும்!

நாடு விடுதலை பெற்று ஏறத்தாழ முப்ப தாண்டுகள் சென்றும் மக்கள் வாழ்க்கை இன்னும் சீர் பெற்றிலது. ஏழை மக்கள் இன்னும் அன்றாட வாழ்க்கைக்கே பெரிதும் துன்புற்று வருவதைக் கண்கூடாகக் காண் கிறோம். ஒருவகைப் போலியும் புன்மையும் கலந்த நாகரிகம் பெருகப் பெருக, மக்களிடையில் இருந்த பண்பாடும், ஒழுக்கமும் திக்குமுக்காடிச் சிதைந்து போய்க் கொண்டிருக்கின்றன. ஒரு பக்கம் உண்மையான உழைப்பும் ஏழ்மையும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்து, கோடிக்கணக்கான மக்களை வறுமைத் தீயில் வாட்டிச் சீரழித்துக் கொண்டுள்ளன. மறுபக்கம் செல்வக் கொழிப் பும், சோம்பேறித்தனமும் கைகோத்துக்கொண்டு, வீண் ஆரவாரங் களையும் ஊதாரித்தனங்களையும் மேலோட்டமான வாழ்வியல் கூறு களையும் கட்டிக்காத்து வருகின்றன. மக்கள் உண்மையான உழைப்பிலும் அதன்வழிப் பொருளீட்டி வாழ்வதிலும் மிக்க அவ நம்பிக்கை கொள்ளும்படி நிலைமை இழிவடைந்து வருகிறது. உழைக்

காமலே முன்னேறுவதற்கான வழிவகைகள் புதிது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுப் பெருகிவருகின்றன. உழைப்பு அவமதிக்கப்பட்டு வருகிறது; உழைப்பவன் கீழானவன், திறமையற்றவன், அறிவில்லாதவன் என்று கருதும் போலி மனப்பான்மை பெருகிவருகிறது. எனவே, உடலுழைப்பற்ற வாழ்க்கைக்கு மக்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, பலவழிகளிலும் தங்கள் வருமானங்களையும், வாழ்வுத் துய்ப்புகளையும் பெருக்கிக் கொள்ள துடிப்புள்ளவர்களாக மாறி வருகின்றனர். போலிப் பெருமையும் பொருள் வேட்கையும் அவர்களின் ஒழுக்கவுணர்வைச் சுக்குநூறாகச் சிதைத்து வருகின்றன. புன்மைத் தேவைகளுக்காக அவர்கள் அங்காந்து திரிந்து, தங்கள் மெய்ப்பாடுகள் அனைத்தையும் கடைச்சரக்குகளாக்கி வருகின்றனர். வேண்டாத விளம்பர நப்பாசைகளுக்கு அவர்கள் அடிமைகளாகின்றனர்.

ஆண்களும் பெண்களும் சமநிலை என்கின்றபோர்வையில் மிகுந்த ஒழுக்கக் கேடர்களாகி வருகின்றனர். ஒழுக்கம் பகடி செய்யப் பெறுகிறது; பண்பு நகைக்கப் பெறுகிறது; நேர்மை ஏளனப் படுத்தப் பெறுகிறது; எளிமை எள்ளப் படுகிறது; அடக்கம் அமரருள் உய்க்கும் என்பது போய் அவமதிப்புப் பெறுகிறது; அன்பு கோழைமை என்றும், அறிவு தேவையற்ற உணர்வு என்றும் கருதப்பெறுகின்றன. பெருந்தன்மை என்பது ஒருவனை மருத்துவமனைக்கும் சிறைக்கும் அனுப்பி வைக்கும் வேண்டாத ஓர் உணர்வாகிவிட்டது; பொறுமை ஒரு தற்கொலை முயற்சியாகப் போய்விட்டது. இக்கால், நடிக்கத் தெரியாதவன் பிழைக்கத் தெரியாதவன்; திருடத் தெரியாதவன் ஏமாளி! பொய் பேசத்தெரியாதவன் ஒருகோமாளி; தானுண்டு தன் வாழ்க்கையுண்டு என்று நடப்பவன் முழு மூடனாகக் கருதப்பெற்று, இழிவுபடுத்தப் பெறுகிறான். உண்மையான எந்த மனவுணர்வுக்கும் மதிப்பில்லை. போலியான எந்த நடப்பும் மாலையிட்டு வரவேற்புப் பெறுகிறது.

அரசியலிலோ, இந்த ஆரவாரத்தனங்களுக்கும் ஊதாரித்தனங்களுக்கும் அளவே இல்லை. அரசியல் தலைவரே இக்காலத்தில் உண்மையான இறைவனாக மதிக்கப் பெறுகிறார். அவரின் நடை, உடை, நடப்புகள் அத்தனையும் மதிக்கப் பெறுகின்றன. அவர் பார்வைக்கு ஒரு பாராட்டு! அவர் அசைவுக்கு ஓர் ஆரவாரம். அவர் கணைப்புக்கு ஒரு கைதட்டல்! அவர் பேச்சுக்கு ஒரு பின்னணி! அவர் நடைக்கு ஒரு வெற்றி விழா!

கல்விக் கூடங்களுக்கும் கலைக்கூடங்களுக்கும் இக்காலத்தில் ஒரு சிறு வேறுபாடும் காண முடியாது. பொத்தகக் கட்டுகளுடன் கண்ணாடி, சீப்புகளும், மேனி மினுக்குப் பூச்சுகளும் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் படிக்கப் போகின்றன! மாணவர்கள் பெண்களைப் போல் மினுக்கிக் கொள்ளவும், மாணவிகள் ஆண்களைப்போல் தருக்கிக் கொள்ளவும் பயின்று கொள்ளும் கலைக்கூடங்களே இன்றைய கல்விக்கூடங்களாக விளங்குகின்றன. ஆசிரியர்களும் பேராசிரியர்களும் மாணவர்களுக்கு மேடைகள் அமைத்துக் கொடுப்பவர்களாகவும் திரைச்சீலை தூக்குபவர்களாகவுமே பயன்படுகின்றனர். ஆசிரியர்களையோ பேராசிரியர்களையோ இன்றைய மாணவர்கள்

மதிப்பதே இல்லை. காரணியம் அவர்களைவிட இவர்கள் செல்வச் செழிப்புள்ளவர்களைப் போல் காணப்படுகிறார்கள். பேராசிரியர் நடந்துவரும்பொழுது, மாணவர் இயங்கியில் வந்து இறங்குகின்றார்; அல்லது மிதிவண்டியில் அவர்மேலேயே இடித்துக்கொண்டு போகிறார். ஆசிரியரை அறிவுள்ளவராகவோ, குருவாகவோ மாணவர்கள் மதிப்பதில்லை. தங்களுக்குச்சட்டாம்பிள்ளையாகவோ, தோழராகவோ சில நேரங்களில் அவர்களினும் ஒருபடி தாழ்ந்தவராகவோதாம் மதிக்கின்றனர். தங்கள் கட்சித் தலைவர்களுக்குக் கொடுக்கின்ற மதிப்பைத் தன் பேராசிரியருக்குத்தர இக்காலத்தில் எந்த மாணவனும் விரும்புவதில்லை. எனவே பேராசிரியரும் மாணவர்களிடையில் அச்சமும் அடிமைத்தனமும் வெறுப்பும் கலந்த ஒரு போக்குடனேதான் நடக்கவேண்டியுள்ளது. இந்நிலையில் தொல்கதைப் பழங்காலத்தில் நடந்த துரோணன்—ஏகலைவன் வரலாறு நடந்திருக்க முடியாத ஒன்றாகவே அவர்களுக்குப்படும்!

குமுகாய நிலைகளில் உள்ள சீர்கேடுகளுக்கு ஒருவரையறையே இல்லை. எங்குப் பார்த்தாலும் ஒரு மேலோட்டமான போக்கு; பொருளற்ற புன்மை வாழ்க்கை! விளம்பரங்கள் வேடிக்கைகள், ஆரவாரக் காட்சிகள்! ஒலிபெருக்கியின் ஓலம் கேட்காத தெருவும், வானொலியின் கதறல் இல்லாத இல்லமும் காண்பதற்கு அரிது; மிக அரிது! தெருவுக்குத்தெரு திரைப்படக் கொட்டகை! அடிக்கு அடி திரைப்பட அம்மண விளம்பரங்கள்! பெண்மையை இழிவுபடுத்திக் கீழ்மை செய்து விலங்குகளினும் தாழ்வாகக் கையாளும் தரக்குறைவான திரைப்பட விளம்பரச் சுவரொட்டிகள்! அவர்களை அரைகுறையான ஆடைகளுடன் வானளாவிய உருவங்களாகச் செய்து, தெரு வோரங்களிலும் முச்சந்திகளிலும் நிறுத்தியிருக்கும் தன்மைகளைப் பார்த்தால், இவர்களை நாகரிகமும் பண்பாடும் உள்ள ஓர் உயிரினமாக விலங்கினங்களும் மதிக்கமாட்டா! இக்காட்சிகளுடன் இவர்கள் பேசும் பாரத(!)ப் பண்பாட்டையும், இவர்கள் போற்றும் கண்ணகி, நளாயினி, சீதைக் கதைகளையும் எவனும் மதிக்கமுடியாது!

கலைவிழாக்கள், கண்காட்சிகள், இயலிசை நாடகக் கூத்துகள் என்னும் பெயரால் நகரங்களில் நடைபெறும் நாகரிகக் காமக் களியாட்டங்களுக்காக இங்குள்ள செல்வக்கள்ளர்களும், கலைஞர்க் குள்ளர்களும் செலவிடும் பொருட் செல்வங்களுக்கு அளவே சொலல முடியாது. ஒழுக்கக்கேடான-மானக்கேடான நடைமுறைகளுக்குத் தாம் கலைகள் என்று பெயரானால் அந்தக் கலைகளே நமக்குத் தேவையில்லை- அவற்றை வளர்க்கும் கலைஞர்களையும் நாம் மதிக்கமுடியாது. மக்களை மாக்களின் உணர்வுகளினின்று மீட்டெடுப்பதே கலைகளின் உண்மை நோக்கமாக இருத்தல்வேண்டும். மீண்டும் அவர்களை விலங்கு வாழ்க்கைக்கு இட்டுச் செல்வதே அவற்றின் பயனாக இருக்குமானால், அவற்றைக் குழிதோண்டிப் புதைத்து, அம் மணமேட்டில் இந்நாட்டின் கோடான கோடி ஏழைமக்கள் தங்கள் வாழ்க்கைக்கு அடித்தளம் இட்டுக் கொள்ளல் வேண்டும். இன்ப வாழ்வின் சுவை என்னதென்றே விளங்காத ஏழைமக்கள், தங்களின் ஒரு வேளைச் சோற்றுக்கே அங்காந்து திரிகையில், அவர்களின் பெண்டு பிள்ளைகள் அனைத்தும் வெயிலிலும்

மழையிலும் வீடின்றி, கட்டத் துணியின்றித் தெருத்தெருவாக இரந்து குடித்துக் குற்றுயிரும் குலையுயிருமாகச் செத்துக் கொண்டிருக்கையில் ஒரு சில செல்வர்களின் பொழுது போக்குககாக ஏன் இத்தனைப் பணத்தைச் செலவிட வேண்டும்? இஃது எப்படி நேர்மையான ஒரு நடைமுறை என்று சொல்ல முடியும்?

விடியல் முதல் நள்ளிரவு வரை இடுப்பொடிய உழைக்கும் தொழிலாளர்கள், இராப்பகல் என்று பாராமல் கூலிவேலை செய்தும் பிழைப்பதற்கு வழியறியாமல் துன்புறும் ஏழைமக்கள் இந்த நாட்டில் கோடிக்கணக்கில் இருக்க, இந்நாட்டின் முன்னேற்றம் என்பது திரைப்படக் கொட்டகையின் எண்ணிக்கையிலோ, கலைவிழாக்களிலோ, பொத்தகப் பெருக்கங்களிலோ, பல்கலைக் கழகக் கட்டிடங்களிலோ தாம் இருக்கின்றது என்று கூறுவது அரசியல் ஏமாற்றாகும்! இன்னுஞ் சொன்னால் இந்த நாட்டின் எதிர்காலத்தை நலிவுபடுத்துவதுமாகும்!

ஒரு நாட்டில் உண்மையான உழைப்புக்கு மதிப்பிருக்குமானால் அந்நாட்டில் பொழுதுபோக்கு ஊதாரித்தனங்களுக்கே இடம் இருக்க முடியாது! இந்நாட்டை ஆளுகின்ற ஆட்சியாளர்கள் செல்வர்களின் மறைமுகமான ஆசை அங்காப்புகளுக்குத் தீனிபோடும் வேடிக்கைகள் சிற்றூர்ப்புறங்களில் வாழும் ஏழை எளியவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. அண்மையில் சென்னையில் நடைபெற்ற அனைத்துலகத் திரைப்பட விழாவில் கலை என்னும் பெயரால் காட்டப்பெற்ற காமக்களியாட்டங்களால் யாருக்கு என்ன நன்மை என்று இந்நாட்டு மக்களின் முன்னேற்றத்தில் உண்மையான அக்கறை கொண்ட ஒருவரால் புள்ளி விளத்தம் காட்டி விளக்க முடியுமா? ஒரு காட்சிக்கு 5 உருபா கட்டணம் இட்டதும், அக்கட்டணச் சீட்டை நூறு உருபா கொடுத்து அடித்துப்பிடித்து வாங்கியதும், காட்டப்பெற்ற ஓரிரு திரைப்படங்களில் பாலியல் காட்சிகள் வரவில்லை என்பதால் அவற்றைப் பார்க்கவந்த பொது(!) மக்கள்(!) கலவரம் செய்ததும் செல்வச்செழிப்பும் அறிவியல் கொழிப்பும் மிக்க அமெரிக்காவிலோ, அல்லது நாகரிக மிதப்புள்ள பிரான்சிலோ, நடந்திருக்குமானால் நமக்குக் கவலையில்லை. (உருசியாவிலும் சீனாவிலும் இவை நடைபெற முடியாது.) ஆனால் தெருச்சாய்க்கடைப் புழுவினும் கீழான நிலையில், உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி, ஒதுங்க நிழலின்றிப் பலகோடி மக்கள் வாழும் இக் கேடுகெட்ட இந்திய நாட்டில் [வெட்கமில்லாமல் 'பாரதநாடு' என்று வேறு பெயர் வைத்துக் கொள்கிறார்கள்] இச்செல்வத் திருவிழாக்கள் நடைபெற்றதும், பெறுவதுந்தான் இழிவினும் இழிவு! கேட்டினும் கேடு! இந்த விழாவிற்கு நடுவணரசுத்துணை! மாநில அரசின் குடைபிடிப்பு! 'தாசு கோரமண்டல்' விடுதியில் இவ்விழாவை நடத்தும் நூற்றுக்கணக்கான கோமான்களின் அன்றாடக் கூத்தடிப்பு!

இனி, நம் அமைச்சர்களுக்கு எவ்வளவோ சிக்கல்கள்! ஒருபுறம் தொழிலாளர் போராட்டங்கள்! மாணவர்களின் எழுச்சிகள்! உழவர்களின் மறியல்கள்! விலைவாசித் தில்லுமல்லுகள்! கள்ளப்பண வாணிகர்களின் கொள்ளையடிப்புகள்! காவலர்களின் கொட்டங்கள்! —இப்படி விடிந்தால் பொழுதுபோகும் வரை ஓயாத அரசியல்,

பொருளியல், குமுகவியல் நச்சரிப்புகள்! ஆனால் எங்கிருந்துதான் இவர்களுக்கு ஓய்வு கிடைக்கின்றதோ; இங்குக் கலைவிழாத் தொடக்க நிகழ்ச்சி, அங்குப் பரிசளிப்பு விழாச் சிறப்பு நிகழ்ச்சி, இவருக்குப் பாராட்டு விழா. அவருக்கு வழியனுப்பு விழா. பள்ளித்திறப்பு, பாலத் திறப்பு, அங்காடித்திறப்பு, குடியிருப்புத்திறப்பு, இயல் விழா, இசை விழா, நாட்டிய அரங்கேற்றம், திரைப்படத் தொடக்க விழா, அடா! அடா ..!. இதுதானா நாட்டையாள வந்தவர்களின் வேலை! இவை தாமா அவர்களின் பணிகள்! இதற்கு முன்னிருந்த ஆட்சியாளரைக் குறை கூறிய இவர்களின் நிகழ்ச்சி நிரல்களும் இப்படித்தானா அமைய வேண்டும்? இப்படி விழாக்களில் பங்கு கொள்வதை அமைச்சர்களின் அதிகாரப் பட்டியல்களில் அமைத்த அறிஞன் எவனோ? இவர்களின் கீழ்ப் பணியாற்றும் அதிகாரிகளும், அறமன்ற நடுவர்களும் தங்கள் அன்றாடக் கடமைகளுக்கு நடுவில் இவர்களைப்போல் விழாக்களிலும் வேடிக்கைகளிலும் களியாட்டங்களிலும் ஈடுபட்டு மக்களைக் களிப் பூட்டு(!) வார்களானால், நாடு எவ்வளவு நன்றாக(!!) இருக்கும்! இந்த வகையில் நாம் எவ்வளவு கொடுத்து வைக்காதவர்கள்! யாரிடம் போய் இத்தகைய மானக்கேடுகளை நாம் சொல்லி ஆறுதல் பெறுவது?

நம்மிடம் உள்ள நூலகப் பெருக்கங்களும், கல்லூரிப் பெருக்கங்களும், கட்சிப் பெருக்கங்களும், காட்சிப் பெருக்கங்களும், கலைக்கூடப் பெருக்கங்களும். ஆட்சியதிகாரப் பெருக்கங்களும், அமைச்சர்களின் பெருக்கங்களும், இங்குள்ள கோடான கோடி ஏழை மக்களுக்கும் அவர்கள் படுந்துயரங்களுக்கும் விடிவுகாண முடியவில்லை என்றால், நம் பண்பாட்டுக்கும் பெருமைக்கும் கட்டியங்கூற முடியவில்லை என்றால், இங்குள்ள போலித்தனங்களுக்கும் நாகரிகப் புரைகளுக்கும் தீர்வு தர இயலவில்லை என்றால், இங்குள்ள சிலரின் உண்மையான உடலுழைப்புக்கும் அறிவூற்றத்திற்கும் வழிவகுக்க முடியவில்லை என்றால், இப்பொழுதைய நிலையில் இந்த நாடே அழிந்து மண் மேடிட்டுப் போகட்டும்! அந்த மண்மேட்டில் புதிய குமுகாயம்-ஒழுக்கத் தையும் உயர்வையும் மதிக்கும் உயர்வான மக்களினம்—உருவாகட்டும்! புத்துணர்வு ஒளி பாயட்டும்! ஓங்குக பொதுவுடைமை! ஒழிந்திடுக செல்வர்களின் ஊதாரித்தனங்கள்! —பெருஞ்சித்திரன்.

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்க முதல் மாநாடு.

ஆழக்கால் வைப்பதினும் அகலக்கால் வைப்பதில் தமிழர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். தமிழரின் சீர்குலைவுக்கு இதுவும் ஒரு தலையாய கரணியம் என்பதை நடுநிலையான உள்ளத்துடன் எண்ணிப் பார்ப்பவர்கள் உணர முடியும். எனவேதான் ஓரிடத்தில் தொடங்கப் பெற்ற ஒன்றை உலகளாவிச் செய்வதில் தமிழரிடையே பலவகை யான முயற்சிகளும் முனைப்புகளும் நடந்து வருகின்றன. அடிப் படையை வலுப்படுத்தாமல் வினையை அகலமாகச் செய்துவிட முடியாது என்பது நம் கொள்கை. அவ்வாறு செய்கின்ற ஒரு வினை வெற்று ஆரவாரமாகவோ, சிலர் தம் பெயர்களை விளம்பரப்படுத்திக்

கொள்ளவோ தான் பயன்படுமேயன்றி, உருப்படியாக எந்த வகையான பயனையும் விளைவித்துவிட முடியாது.

திடுமென ஓர் இயக்கத்தைத் தோற்றுவிப்பதிலும்; அதனை இறுதி வரை கட்டிக்காக்க வியலாமல் தோல்வியுறுவதிலும் தமிழர்கள் மிகச்சிறப்பான இடத்தைப் பெற்றவர்கள்.

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்

—என்பது திருக்குறள். அதனால்தான் உலகளாவித் தோற்றுக்கப் பெறும் தமிழரின் பல இயக்கங்கள் மிகச் சிறுகால எல்லையிலேயே இடைமுரிந்து மடிந்து போகின்றன.

நம்மில் பலவகையான கருத்து வேறுபாடுகள் எப்பொழுதுமே உண்டு. கருத்து வேறுபாடுகள் ஒரு வகையில் தவறும் அன்று. ஆனால் அவை ஆக்கத்தை நோக்கியனவாக இருத்தல் வேண்டும். சோறு சமைப்பதில் சண்டையிட்டுக்கொண்டு சோற்றுப் பானையையே உடைத்து விடக்கூடாது. நாம் கொள்ளும் கருத்து வேறுபாடுகள் மனவேறுபாடுகளாகி நாம் கொண்ட கொள்கையே தவறு என்று பிறர் கருதி விடும்படியோ, அதனை நாமே அழித்துக் கொள்ளும் படியோ இருந்து விடல் ஆகாது. வண்டியை எந்தப் பாதையில் செலுத்தினாலும் நம் கொள்கை இலக்கின் திசை நோக்கி அதனைச் செலுத்தத் தவறிவிடக்கூடாது. கொள்கை மூன், நாம் பின் என்னும் போக்கே ஓர் இயக்கத்தைக் கட்டிக்காக்கும் உரஞ்சான்றது. நம்மை முன் வைத்துக் கொள்கையைப் பின்னுக்குத் தள்ளி எந்தப் பொதுவுணர்விலும் நாம் வெற்றி கண்டு விடமுடியாது.

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்

என்னும் திருக்குறளையும்,

நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை

என்னும் திருக்குறளையும், பொதுப்பணி செய்யப் புறப்பட்டவர்கள் என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

ஒரு பணியைத் தொடங்கிபவர் யார் என்று நாம் பார்ப்பதை விட, அதனை வெற்றியுற முடித்தவர் யார் என்பதிலேயே நம் கவனம் முனைந்து நிற்றல் வேண்டும். நம்மை ஓர் இயக்கத்தின் கருவியாகக் கருதிக்கொள்ள வேண்டுமே தவிர, இயக்கமாகவே கருதிவிடக் கூடாது. இத்தகு மனநிலைகளைப் பெற்றுவிட்டாலே ஓர் இயக்கம் மெதுமெதுவாகவேனும் சிறிது சிறிதாக வலுப்பெற்றுத் தன் இலக்கைக் காலப்போக்கில் பெற்றுவிடும். உலகந்தழுவிய ஓர் இயக்கத்தைத் தோற்றுவிப்பவர்கள் இக்கருத்துகளை முதலில் நெஞ்சில் இறுத்திக் கொள்ளல் வேண்டும்.

கடந்த திசம்பர் 16, 17, 18-ஆம் பக்கல்களில் சென்னையில் நடைபெற்ற உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாடு பலவகையான இடர்ப்பாட்டு நிலையிலும் ஒருவாறு நடந்து முடிந்தது

வரவேற்கத்தக்க ஒரு செய்தியாகும். இவ்வியக்கம் 1974-ஆம் ஆண்டு இலங்கையில் உள்ள குரும்புசிட்டி கனகரத்தினம் என்பவரால் தோற்றுவிக்கப் பெற்றதாகும். தொடக்க காலத்தில் இதன் தலைவராக, தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் பண்டாரகர் சாலை இளந்திரையன் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இக்கால் இதன் தலைவர் மலேசியாவில் உள்ளவரும், தமிழ், தமிழ்ப்பண்பாடு, தமிழின முன்னேற்றம் ஆகியவற்றில் ஆழ்ந்த அக்கறையும் ஆர்வமும் கொண்டவருமாகிய திரு. இர. ந. வீரப்பன் அவர்களாகும். இதன் இந்தியக் கிளை ஒன்று சென்னையில் உள்ளது. அதன் முழு முயற்சியால்தான் சென்னையில் அதன் முதல் மாநாடு நடந்தது. மாநாடு வெற்றியுற நடந்ததா இல்லையா என்று கருதிப்பார்க்கத் தேவையில்லையானாலும், அதனை ஒரு கருத்தரங்கு அளவிலேனும் சிறப்புற நடத்திய திரு. அரு. கோபாலன், பாவலர் திரு. வ. மு. சேதுராமன் (தமிழ்ப் பணி ஆசிரியர்) முதலியவர்களை நாம் பாராட்டியே ஆகல் வேண்டும். மாநாட்டிற்கு இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பிரான்சு, இறியூனியன், பிசித்தீவு, மொரீசியசு, இந்தோனேசியா, பர்மா-முதலிய நாடுகளிலிருந்தெல்லாம் பேராளர்கள் வந்திருந்தனர்.

மாநாட்டில் அயலகத் தமிழர்களுக்கும் தாய்நிலத்தமிழர்களுக்கும் நலஞ்சேர்க்கும் பதினொரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்று, அவை தொடர்புடைய நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு விடுக்கப் பெற்றுள்ளன. மாநாட்டிற்கு வந்திருந்த படிநிகராளியரைத் தமிழக முதல்வர் திரு. ம. கோ. இராமச்சந்திரன் அவர்கள் பாராட்டி ஒரு விருந்தும் அளித்தார். மொத்தத்தில் மாநாடு அதனளவில் நல்ல பயனை விளைவிக்காமற் போயினும், உலகளாவிய தமிழர் தம் தாய்த் தமிழையும், தமிழ்ப்பண்பாட்டையும் காத்துக் கொள்ள எழுச்சி கொண்டு விட்டனர் என்பதை மற்ற இனத்தார் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்தது. இக் கருத்து விளைவையே ஒருவகை வெற்றியாகத்தான் நாம் கருதுகிறோம்.

மாநாட்டைத் தொடர்ந்து 20-12-77 அன்று, சென்னை பெரியார் திடலில், மாநாட்டுப் பேராளர்களைப் பாராட்டி ஒரு சிறப்பு விழா நடந்தது. உ. த.ப. இயக்க இந்தியக்கிளையை முதன்முதல் அமைத்த திரு தமிழ்மன்னன் அவர்களும, செல்வி. தன்மானம் அவர்களும் அந்த விழாவை ஒரு மாநாடு போலவே நடத்திக் காட்டினர். அதில் கலைஞரும் நானும் அழைக்கப்பெற்றோம். உ.த.ப. இயக்க மாநாட்டின் சோர்வை, அயலகத் தமிழர்கள் இப்பாராட்டு விழாவில் போக்கிக் கொண்டனர் என்றால் அது மிகையாகாது.

உட்பூசல்களை மறந்து போலி ஆரவாரங்களையும் தவிர்த்து உ.த.ப இயக்கம் தமிழ்மொழிக்கும் பண்பாட்டிற்கும் இனத்திற்கும் முழுமையாகவும் உண்மையாகவும் தொண்டாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன், அதன் கொள்கையில் வெற்றி பெறவும் நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறோம். —பெருஞ்சித்திரன்.

பனிமலையின் நெற்றியில் திராவிடர்!

க. ப. அறவாணன், க. மு.
*திராவிட மக்களியல் பேராசிரியர், தக்கார் பல்கலைக் கழகம்'
தக்கார், செனகால், மேற்காப்பிரிக்கா.*

சிந்து வெளிக்கரையில் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு திராவிடர் வாழ்ந்திருந்தனர்; அவர் திராவிட மொழி பேசினர். அரும்பெரும் நாகரிகம் ஒன்றைச் சிந்துவெளி ஆற்றங்கரை ஓரத்தில் படைத்தனர். கி.மு. 1500-இல் நடு ஆசியாவிலிருந்து ஆரியர் படை எடுத்தனர். ஆரியர்க்கும் சிந்துவெளித் திராவிடர்க்கும் பெரும் போர்கள் நடந்தன. திராவிடர் தம் கோட்டைகள் இந்திரனால் தகர்க்கப்பட்டன. அதனால் இந்திரன் புரந்தரன் (கோட்டைகளைத் தகர்ப்பவன்) என்று பெயரெய்தினான். நாக வழிபாட்டினராகிய திராவிடரை இந்திரன் வென்றான். திராவிடர் பலர் இறந்தனர். குடியினரில் சிலர் தென்புலம் பெயர்ந்தனர். மற்றும் சிலர் ஆரியர் தம் தலைமையை ஏற்றுக்கொண்டு அடங்கினர்.

வடஇந்தியாவில் திராவிடர் இருந்தமைக்கான சான்று சிந்து வெளி தவிர வேறு இல்லையா என்று வினவுவர். ஆப்கானித்தான், ஈரான், பலூசித்தான், ஆகிய நாடுகளில் இன்றும் பேசப்பெறும் பிராகுயி என்னும் மொழி திராவிட மொழி என்றறியப் பெற்றிருக்கிறது. அண்மையில் நேப்பாளத்தில் ஒருசில குடிமக்கள் பேசும் மொழி திராவிடமே என்று அறிய வந்திருக்கிறது. சமற்கிருதத்திலும், இந்தியிலும், வங்காளியிலும திராவிட மொழிக் கூறுகள் படிந்துள்ளன என்ற செய்தி மொழியியல் அறிஞர்களால் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது.

மேலே கண்ட மொழியியல் சான்று மட்டுமன்றி, இன்ன பிற மக்களியல் வரலாற்றுச் சான்றுகளும் இப்போது கிடைத்து வருகின்றன.

1. வரலாற்றுத்தந்தை என்று கருதப்பெறும் கிரேக்க அறிஞன் ஏரோடேட்டசே தென்னிந்தியா பற்றி முதன்முதல் வழிப்போக்குக் குறிப்பு எழுதியவர். கி.மு 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர், சிந்துவெளியில் கறுப்பு நிறமும் சுருட்டை முடியும் உடைய திராவிடரைக் கண்டதாகக் குறிப்பு எழுதியுள்ளார். "சிந்துவெளியில் இப்போது வெள்ளை இனத்தைச் சார்ந்த ஆரியர் வாழ்கின்றனர். முன்பு திராவிடர் அக்கரைகளில் வாழ்ந்தனர்" என்பதை எரோடேட்டசின் குறிப்பு எடுத்துக் காட்டுகின்றது.

2. இன்றுள்ள இந்திய மாநிலங்களுள் பெரிய மாநிலமாக விளங்கும் நடுவண் பைதிரத்தில் (உத்திரப் பிரதேசத்தில்) அரச இலச்சனை இரட்டை மீன்களும் வில்லும் உடையதாக இருப்பது கருதத்தக்கது. வில் தமிழ் மூவேந்தர்களுள் ஒருவராகிய சேரர் தம்

குடி இலச்சினை! கொடி இலச்சினை! மீன் பாண்டிய மன்னர்தம் குடி இலச்சினை! கொடி இலச்சினை. இச்சான்றுகள் அற்றைத்தமிழ் மன்னர் தம்மாச்சங்களல்லவா!

3. இன்று வடபுலத்தில் வாழும் கறுப்பு நிறமக்கள் அனைவரும் முன்னைத் திராவிட மக்களின் எஞ்சிய பகுதியினர் என்று கருதுதல் வேண்டும். நாகாலாந்தில் வாழும் நாகர்கள் திராவிடர்க்குரிய உடல் தோற்றத்தை உடையவர்கள் கறுப்பு நிற மக்களாகிய நாகர்கள் பாம்பு வழிபாட்டினர், 'நாக' என்ற சொல்லே திராவிடச் சொல் லாகும். ஆரியமொழிச்சொல் 'சர்ப்ப' என்பதாகும். சமற்கிருதம் உள்ளிட்ட இந்தோ ஐரோப்பிய குடும்ப மொழிகளுள் 'சர்ப்ப' என்ற சொல்லே வழங்குகிறது. இலத்தீனில் 'தவழு' என்ற பொருளடிப் படையில் 'சர்ப்ப' என்ற சொல் பாம்பைக் குறிக்கிறது. கிரேக்கத்தில் 'கெர்ப்ப என்ற சொல்லும் ஃபிரஞ்சில் 'சர்ப்பான்' என்ற சொல்லும் ஆங்கிலத்தில் 'சர்ப்பென்ட்' என்ற சொல்லும் வழங்குகின்றன. மிகு குளிர் நாடாகிய ஐரோப்பாவில் வெப்ப நாடுகளில் மட்டுமே வாழும் நாகப்பாம்பு இல்லை என்பதும் கவனிக்கத்தக்கது. பொரு ளில்லா இடத்தில் பெயரேது? எனவே நாகப்பாம்பைக் குறிக்கும் 'நாக' என்ற சொல் திராவிடச்சொல் என்பதும் இப்பெயரை உடைய 'நாகர் இனம்' திராவிடர் இனம் என்பதும் தெளிவாகின்றன. திராவிடராகிய' நாகர் வடபுலம் வந்த ஆரியரை எதிர்த்தனர்; ஆனால் தோற்றனர். இச்செய்தியை இருக்கு வேதம் குறிப்பாக உணர்த்து கின்றது. 'அகி' என்ற நாக வடிவில் இருந்த விருத்திராசுரனை இந்திரன் கொன்றான் எனவரும் இருக்கு வேதத்தல் வரும் இந்திரத் துதி, ஆரியர் நாகரை வென்ற செய்தியை மறைமுகமாகக் குறிப்பிடு கின்றது. கேரள மன்னராகிய சேரர் நாகர் மரபினரே. சேர மண்டலம் என்பதன் ஒரு பொருள் நாகமண்டலம் என்பதாகும். சேரரின் இலச்சினையாகிய வில் பாம்பை நினைவுபடுத்தும் இலச்சினை யாகும்! சிவபெருமான் 'வாசுகி' என்ற பாம்பை வில்லாக வளைத்தான் என்ற கதை இங்கே இணைத்து நினைக்கத்தக்கது. திராவிட மாநிலங் களில் கேரள மாநிலமே நாகவழி பாட்டில் முதன்மையாக நிற்கிறது. நாயர் என்ற சொல்லே, நாகர் என்ற சொல்லின் திரிபாகும். தலை முடியை முடிச்சிட்டு முன்தலை அமைத்துக்கொள்ளும் நாயர் உருவம் நாகப்பாம்பின் படத்தை நினைவு படுத்துவதாகும். பாம்புகள் நிரம்ப உடைய காண்டவ வனத்தை ஆரிய அர்ச்சுனன் எதிர்த்ததாகக் குறிக்கப்படும் மாபாரத நிகழ்ச்சி திராவிட நாகரை ஒழிக்க ஆரிய அரசு எடுத்துக்கொண்ட முயற்சியைக் குறிப்பதாகும். கேரளத்தில் 'மன்னார்சாலா' என்ற ஊரில் சில குடியினர் இன்றும் வாழ்கின்றனர். அவர்தம் வீட்டுத் தோட்டங்களில் 'சர்ப்பக்காவுகள' உள்ளன. அம் மக்கள் தம்மை நாககுலத்தினர் என்றும் அருச்சுனன் தம் பண்டை இருப்பிடமாகிய காண்டவ வனத்தை எரித்தமையால் தம் முன்னோர் இங்கே வந்தனர் என்றும் கூறிக்கொள்கின்றனர். (Anthropology

in India P. 196) எனவே சேரர் நாகர் என்பதும், நாகர் சேரர் என்பதும், நாகர் திராவிடர் என்பதும் அறியத்தக்கன. நாக வழிபாடு திராவிடர்க்குரிய ஒன்று. அதுவட புலத்தில் ஆங்காங்கே பரவி இருப்பதும் அதன் பெயராலேயே ஓர் இனம் இருப்பதும் பண்டைத் திராவிடர்தம் பண்பாட்டு எச்சங்களைக் காட்டுகின்றன.

4. கிள்ளி, கிள்ளி வளவன் என்ற பெயர்கள் சோழர்க்கே உரிய பெயர்களாம். பீகார் மாநிலத்தில் 'அசூர்' என்ற பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். அசுரர் என்ற சொல்லின் தேய்ந்த வடிவம் 'அசூர்' என்பதாகும். 'அசூர', 'அசுரர்' என்பவற்றின் பொருள் வலிமை வாய்ந்தோர் என்பதாகும். ஆரியர் தம் வேதங்களில் தம்மை எதிர்த்த மக்களை 'அசுரர்' என்று குறிப்பிடுவர். திராவிடர் உடன் வாழ்ந்த மூண்டா பழங்குடி மக்களுள் ஒரு பிரிவினரே அசுர் என்ற இனம். இப்பழங்குடி மக்கள் சிந்துவெளியிலிருந்து பீகாருக்குக் குடியேறியோர் என்று கருதப்பெறுகின்றனர். இவர்கள் தம் குடி அமைப்பினைக் 'கிள்ளி' என்று குறிப்பிடுகின்றனர். இவர்தம் குடியில் ஐந்து உறுப்பினர்களைக்கொண்ட ஐம்பெருங்குழு இன்றும் இருந்து வருகின்றது. ஏனைய மக்களைப்போல வெளுத்த நிறத்தின ராய் இல்லாமல் திராவிட இனத்தினரைப்போல கரிய இனத்தினராய் இவர்கள் உள்ளனர். இவர்கள வாழுமிடம் சோடா நரகபுரியாகும். சோடா என்பது சோழா என்பதின் ஆரிய வடிவமாகும். 'ழ'கரம் டகரமாகத் திரிதல் இரு மொழி இயல்பு. கோழி, கோடி, மூதலான வற்றை ஒப்பிட்டு நோக்குக. அசுர் பழங்குடிப் பெண்கள், தமிழச்சி யரைப் போல, இடுப்பில் சேலையணிந்து அச்சேலையையே மாராப்பாக அணிந்து கொள்கின்றனர். ஆக கிள்ளி என்ற பெயர் இவர் தம் கறுப்பு நிறத் தோற்றம், ஐம்பெருங்குழு என்பதன் அமைப்பு சிந்து வெளித்தொடர்பு, மூண்டா மொழிப் பேச்சு, ஆரியரை எதிர்த்தவேத கால அசுரரின் தொடர்பு சோடா என்ற நிலப்பெயர் ஆகியன வட புலத்தில் தமிழ்ச்சோழர் பண்டைய வாழ்வை நினைவுறுத்துகின்றன.

பனிமலையில் பல கணவாய்கள் உள்ளன. அவற்றுள் ஒரு கணவாயின் பெயர் 'சோடா' என்று வழங்குகிறது. இது 'சோழா' என்பதின் திரிபு ஆகும்.

5. திராவிட மொழிகளைப் பேசும் சில பழங்குடி மக்கள் இந்தியாவின் நடுப்பாகத்தில் வாழ்கின்றனர். இவர்கள் பேசும் மொழிகள் நடுத்திராவிட மொழிகள் என்று அழைக்கப்படும். ஒரிசா மாநிலத்தில் 'மார்ச் குண்டு' என்ற ஆற்றுக்கு வடமேற்கே 'போண்டோ' என்ற பழங்குடியினர் வாழ்கின்றனா. வடபுலத்தில் வாழும் பழங்குடி மக்களுள் இம்மக்கள் மிக்க வலிமை வாய்ந்தோர் எனறு மாந்த இயல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இம்மக்கள் பனை மரத்திற்கு மிகுந்த முதன்மை அளிக்கின்றனா. இவர்தம் நிறம் தோற்றம் ஆகியன திராவிடரை நினைவு படுத்துவன. குறிப்பாகத் தமிழ்நாட்டுப் பாண்டியர் தம்மை மறவர் என்று அழைத்துக்

கொள்வதும், பாண்டிய நாட்டு மறக்குல மக்கள், பாண்டிய என்ற பெயரைப் பட்டப்பெயராக வைத்துக் கொண்டிருப்பதும் ஒரு சார் பழங்குடி மக்கள் தம்மை 'போண்டோ' என்று அழைத்துக் கொள் வதும் மூரட்டுத் தன்மை உடையராய் இருப்பதும் இணைத்து நினைக்கத்தக்கன. அன்றியும் தமிழ் நாட்டில் ஏனைய பகுதிகளைக் காட்டிலும் பாண்டிய நாட்டுப் (மதுரை, திருநெல்வேலி, இராமநாத புரம்) பகுதிகளிலேயே பனை மரங்கள் மிகுதியாக இருக்கின்றன. இங்கே வாழும் மக்கள் தம் வாழ்வு பனை மரத்தைச் சார்ந்து அமைந் திருக்கின்றது. இதனைப் போலவே போண்டா பழங்குடி மக்கள் பனைமரத்தோடு ஒன்றிய வாழ்க்கை உடையராய் வாழ்ந்து வரு கின்றனர். எனவே போண்டோ பழங்குடி மக்கள் பண்டைய பாண்டிய இனத்தின் எச்சமோ என்று கருதவேண்டி உள்ளது.

இதுவரைக் கூறிய செய்திகள் வடபுலத்தில் திராவிடர் உரிமை மாந்தராய் வாழ்ந்தனர் என்பதை மொழியியல் சான்றுகள் மட்டு மின்றி மக்களியல் சான்றுகளும் வற்புறுத்துகின்றன. தமிழரசர் இமய எல்லையை வட எல்லையாகக் கருதினதாகவும் இமயத்தில் வில், புலி, கயல் இலச்சினைகளைப் பொறித்ததாகவும் கொடிகளைப் பறக்க விட்டதாகவும் பண்டைய தமிழ் இலக்கியத்துள் இடம் பெற்றுள்ள செய்திகள் பொய்யானவை அல்ல என்பதைக் காட்டுகின்றன.

தென்னாட்டு வரலாறு தென்னாட்டவர்களாலேயே எழுதப் பெறுதல் வேண்டும்!

தென்னிந்திய வரலாற்றின் மீது அதிக ஆராய்ச்சி நடத்த வேண்டுமென்றும், அவ்வாராய்ச்சி தென்னிந்திய வரலாற்றுப் பேராசிரியர்களாலேயே எழுதப்பெற வேண்டுமென்றும், வெகு கால மாகத் தெனனிந்திய வரலாற்று ஆராய்ச்சி பெருமபாலும் வட இந்தியர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் ஆகியோரால்தான் மேற் கொள்ளப்பட்டு வந்திருக்கின்றதென்றும், அது பெரிதும் வருந்துதற் குரியதென்றும் சவாகர்லால் நேரு பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் பர். எசு. கோபால் சன. 4-இல், சென்னையில் நடை பெற்ற தெனனிந்திய வரலாற்றைப் பற்றிய கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர், மேலும் பேசுகையில் இவ்வாராய்ச்சி இந்தியாவிலேயே செய்யப் பெறுமல் மலேசியா, ஆத்திரேலியா, பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகளில் செய்யப்பட வேண்டியிருப்பது வெட்கப்படத்தக்க தாகும் என்றும் ஆனால் அண்மை ஆண்டுகளில் இப்போக்கில் ஒரு மாற்றங்கண்டுள்ளதாகவும், சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பண்பாட்டியல் கழகத்தின் இயக்குநர் பர். கே. கே. பிள்ளையின் நன் முயற்சியால் தென்னிந்தியாவிலேயே தொடங்கப் பெற்றிருப்பது பெரிதும் மகிழ்ச்சிக்குரியது என்றும் கூறினார். o

பெயர் மாற்றக் கோரிக்கைப் படிவம்.

விடுநர்.

திரு. ______________________

முகவரி ______________________

____

" ______________________ ஆகிய நான் இது முதற்
(தடிப்பெழுத்தில் பழைய பெயர்)

கொண்டு ______________________ என்னும் பெயரால்
(புதிய பெயர் தடிப்பெழுத்தில்)

அழைக்கப்பட வேண்டும்.'!

இடம் ____________ கையொப்பம்
நாள் ____________ (பழைய பெயரில்)

கோரிக்கையாளரின் அகவை (Age) ________ நாள் ________ ஆண்டுகள்

பெயர் மாற்றத்தின் காரணம்: (நான் இலக்கிய வழி தூய தமிழ்ப் பெயரைச் சூட்டிக் கொள்ள விரும்புகின்றேன்.)

நான் தமிழ்நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவன் என்று இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

கையொப்பம்
(பழைய பெயரில்)

சான்றுளர் உறுதிமொழி.

மேலே கூறப்பெற்ற செய்திகள் யாவும் என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் நிறைவான வகையில் சரியானவை என்று உறுதி கூறுகிறேன்.

சான்றுளர் கையொப்பம். (சான்றுளர்
மதிப்பு வாய்ந்த ஒருவராக இருத்தல் வேண்டும்.):

சான்றுளர் பெயரும், தகுதி (அல்);
தொழிலும், முகவரியும்,

அன்பர்கள் பலரின் வேண்டுகோளுக்கு இணங்கிப் பெயர் மாற்றக் கோரிக்கைப் படிவத்தின் போலிகைப்படி வெளியிடப் பெறுகிறது. தங்கள் பெயரைத் தூய தமிழில் நிலையாக மாற்றிக்கொள்ள விரும்பும் அன்பர்கள் இதுபோல் ஒரு படிவத்தை நிரப்பி, உருபா. 7-50 பணவிடையுடன், இயக்குநர், எழுது பொருள் அச்சுத்துறை, தங்கசாலை, சென்னை-1. என்னும் முகவரிக்கு விடுத்து வைக்கவும். பெயர் மாற்ற இசைவு அரசுப் பதிவேட்டின் (Gazette) வழி அறிவிக்கப் பெறும்.

செய்திகள்

(சிறப்பு)

1. இராமகிருட்டிணன்—மலர்க்கொடி திருமணம்!

கடந்த நளி. 12 (27—11—77) ஆம் நாள், நெய்வேலியில் செல்வன் க. இராமகிருட்டிணன் செல்வி. இரா. மலர்க்கொடி அவர்களின் திருமணம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தெ. ஆ. உ. த. க. மாவட்ட அமைப்பாளர் திரு. இரா. அருட்குவை அவர்களின் தங்கை மலர்க்கொடிக்கு நடந்த இத்திருமண விழாவில் நெய்வேலி நகரியத்தைச் சேர்ந்த எல்லாத் தமிழன்பர்களும் அதிகாரிகளும் கலந்துகொண்டு, மணமக்களை வாழ்த்தினர். மணமக்களை வாழ்த்தி மொழி ஞாயிறு பாவாணர் அவர்களின் வாழ்த்துரை வருமாறு.

இராம கிருட்டிண மலர்க்கொடியர் இவ்வுலகில்
பராவு குறளுரை பண்புபயன் பாங்காக
விராவி யொருமன வின்பமெலாம் நீடுறுக
உராவு தமிழ்மணம் உலகெங்கும் ஓங்கியரே!

மணவிழாவிற்கு அடுத்த நாள் பாவாணர் தமிழ்க் குடும்ப மகளிரணி சார்பில் திருமணத்தில் கலந்து கொண்ட திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு உருபா இருபது அன்பளிப்பாகத் திருவாட்டி தமிழரசி அறவாழி அவர்களால் தரப் பெற்றது.

2. உலகத்தமிழ்ப் பண்பாட்டுக் கழகக் சிறப்புக்கூட்டம் சென்னை!

சென்ற 20—12—77 மாலை 6–மணிக்குச் சென்னை பெரியார் திடலில் உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகச் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குச் சட்டமன்ற உறுப்பினர் சூசை தலைமை தாங்கினார். செல்வி. தன்மானம் அறி.இ. வரவேற்புரை நிகழ்த்தினார். கூட்டத்தில் கலைஞர் கருணாநிதி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், விடுதலை ஆசிரியர் கி. வீரமணி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார். உ.த.ப.க. சார்பாக அதன் தலைவர் இர. ந. வீரப்பன் (மலேசியா), பொதுச்செயலாளர் இரா. கனகரத்தினம் (இலங்கை) முரசு நெடுமாறன் (மலேசியா) வீ. தேவகுமாரன் (இறியூனியன, பிரானசு). எம். எசு. இராமுலு (இந்தோனேசியா), பாவலா ஐ. உலகநாதன் (வெங்காலூர்), மு. தங்கமுத்து (மொரீசியசு), சுப. சுப்பிரமணியன் (அந்தமான்), வே. இளங்கோ பொறி.இ. (யாழ்ப்பாணம்), க. இராசமனோகரன்

(யாழ்ப்பாணம்) முதலியோர் தம்தம் நாட்டில் உள்ள தமிழர்களின் அரசியல், பொருளியல் வாழ்வியல் குறித்துக் கருத்துரை நல்கினர். இறுதியில் ஈழம் கு. தமிழ்மன்னன் நன்றியுரை கூறினர். இந்நிகழ்ச்சிக்கு ஓரிரு நாட்கள் முன்னர் நடைபெற்ற உ.த.ப.க. மாநாட்டை விடப் பல மடங்கு சிறப்புறும்படி இக்கூட்டத்தை அமைத்த கு. தமிழ்மன்னன், செல்வி. தன்மானம் இருவரின் முயற்சியும் பெரிதும் பாராட்டி மகிழத்தக்கதாயிருந்தது.

அன்பளிப்புகள்

1. தென்மொழியன்பர் திரு. அ. பொன்னுசாமி, (பெருமாம் பாளையம், ஏமப்பள்ளி (அஞ்) சேலம் மாவட்டம்) அவர்களின் துணைவியார் திருவாட்டி. குஞ்சம்மாளுக்கு, கடந்த 10—11—77-இல் பிறந்த ஆண் குழந்தை துரைசிங்கின் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு. 10 அன்பளிப்பாக வரப்பெற்றோம். செல்வன் துரைசிங் பல்வகை நலமும் வளமும் பெற்று வாழ்கவெனத் தென்மொழி வாழ்த்துகிறது.

2. திருச்சி, கரூர்வட்டம். பூலாம்வலசு தென்மொழியன்பர் திரு. முத்துகந்தவேள் அவர்களின் துணைவியார்க்கு கடந்த 6-12-77-இல் பிறந்த ஆண்மகவு அறிவுடைநம்பியின் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கென உரு. 10 அன்பளிப்பாக வரப்பெற்றோம். செல்வன் அறிவுடைநம்பி பல்லாற்றானும் பெருக வளர்ந்து நாட்டுக்கும் வீட்டுக்கும் நலம்பல நல்குகவெனத் தென்மொழி வாழ்த்துகிறது.

3. கடந்த 26—11—77 அன்று, புதுக்கோட்டை மாவட்டம், கூழிபிறை பெருஞ்சித்திரனார் பதிப்பகம், காசாளர் திரு. அழ. ஆறுமுகம் அவர்களின் துணைவியார் திருவாண்டாளுக்குப் பிறந்த பெண் குழந்தை சித்திரச்செல்வியின் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கென உரு. 5. அன்பளிப்பாக வரப்பெற்றோம். சித்திரச்செல்வி எத்திறத்தானும் பத்தரை மாற்றுப் பசும் பொன்னாய் வளர்ந்து நலம் பல்கி வாழ்கவென வாழ்த்துகிறோம்.

4. கடந்த 25—8—77 அன்று, பவானி வட்டம் தொட்டி பாளையம் ஊ. ஒ தொடக்கப்பள்ளி ஆசிரியர் தொ. இர. நடராசன் செல்வி சத்தியவாணி இருவர்க்கும் சிறப்புற திருமணம் நடைபெற்றது. திருமணத்தில் சித்தோடு பாவலர். குமர. நடவரச ஈவப்பனார், அ. க. சுந்தரம், புலவர். பொதிகைச்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தினர். திருமணத்தின் நினைவாக உரு: 5/-தென்மொழிக்கு அன்பளிப்பாகவும், உரு. 12/-தென்மொழி உறுப்பினர் கட்டணமாகவும் வரப்பெற்றோம்.

மணமக்கள் எல்லா நலன்களும் வளங்களும் பெற்று இனிதே இல்லறம் நடத்தி இன்புற நிறைந்த நெஞ்சுடன் தென்மொழி வாழ்த்துகிறது.

அறிவியல் ஆய்வில் தெரியவந்த உண்மை!

சிந்து வெளியில் பேசப்பட்டது திராவிட மொழியே!

கிறித்துவுக்கு முன் மூன்றாவது, இரண்டாவது நூற்றாண்டுகளில் சிந்து வெளியில் பேசப்பட்ட மொழி, திராவிட மொழியுடன் நெருங்கிய தொடர்பு உள்ளதென்று சோவியத் மாந்தவியல் கழகத்தைச் சேர்ந்த அறிவியலறிஞர்கள் கருதுகின்றனர். தொன்மையான இந்திய மொழிகளின் வாசகங்களை, இப்பொழுது நடைமுறையில் உள்ள திராவிட மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தபொழுது, தொன்மையான இந்திய மொழி, "இலக்கணத்தில்" மட்டுமின்றி, "சொற்களிலும்" திராவிடத் தன்மை கொண்டிருப்பது வெளியாயிற்று.

தொன்மை இந்திய எழுத்துகளை சோவியத்து அறிவியலார் கணிப்பானில் (கம்ப்யூட்டரில்) கொடுத்து ஆய்ந்தனர். இதனால் தொன்மைச் சொற்களின் பகுதிகளையும், ஈறுகள் சந்தி, சாரியை முதலியவற்றையும் தனித்தனியே பிரிக்க முடிந்தது. இதன் விளைவாகத் இந்தியத் தொன்மை மொழியின் இலக்கண அமைப்பு பற்றிய செய்திகள் கிடைத்துள்ளன. கி.மு. 3-ஆவது, 2-ஆவது நூற்றாண்டுகளில் சிந்து வெளியில் பேசப்பட்ட மொழிகளோடு இந்தச் செய்திகளை ஒப்பிட்டுப் பார்த்தபொழுது, அவை திராவிட மொழிகளுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ளவையாகத் தெரிகின்றன. தொன்மைத் திராவிட மொழியின் வட்டார வழக்குகளில் ஒன்றாக இஃது இருந்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. இந்த ஆராய்ச்சி மேலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

—நன்றி–சோவியத்துச் சிறப்புக் கட்டுரைகள்.

தென்மொழிச் சார்பில் வந்த புயற்கொடை

		உருபா
1)	க. ஆ. முருகேசன், 641020.	4-00
2)	கோவை, சேரர் கொற்றச் சார்பில் தென்மொழி. மறை நித்தலின்பனார்	10-00
3)	தி. குமரப்பன், மதுரை.	5-00
	மொத்தம்	19-00

பாவேந்தர் விழாப் பாட்டரங்கம்

—பெருஞ்சித்திரனார்

4. நாடு

இனியவனும் நாடுபற்றி எடுத்துரைத்த வெல்லாம்
இங்கெடுத்துக் கூறிவிடல் எளிதிலைகாண் பெரியீர்!
"எனையீன்ற தந்தைக்கும் தாயினுக்கும் மக்கள்
தனையீன்ற தமிழ்நாடு தனக்குமென்றாத னாலே
தினையளவும் நலமேனும் கிடைத்திடுவ தென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாம்" என்றே
பனிமொழியில் தூளுரைத்துப் பாவேந்தன் சொன்னான்!
பாவலருள் எவரிந்த உரைசொன்னார்? பாரீர்! 43

எரிகின்ற நெஞ்சின்மேல் ஆணையிட்டுச் சொன்னான்!
இனியெங்கள் ஆட்சியிந்த நாட்டிலென்றே உரைத்தான்!
எரிசருகு தமிழர்களை எதிர்த்திடுவோர் என்றான்!
இன்னுமவன் நாடுபற்றிச் சொன்னமொழி கேட்பீர்!

"தென்னாட்டின் நிலைநினைத்தால் வெடிக்கும் உள்ளம்!
செந்தமிழர் நிலைநினைத்தால் துடிக்கும் நெஞ்சம்!

"ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்!
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு
உவப்புடன் நான் சேர்ப்பேன்'

"செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்த தென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!"

புரிகின்ற தமிழ்ப்போர்க்குப் புதுப்புரட்டுக் காரர்
புலைமனத்தால் தடையிடுவார் நாம்அஞ்சல் வேண்டாம்.
சரிகின்ற தமிழினத்தைக் காத்திடுதற் கென்றே
சாகாத உணர்வுடைய இளைஞர்க்கிவை சொல்வான்! 44

"தமிழ்நிலத்தில் தமிழான பயிர்விளைச்சல் குறைவு!
தமிழ்நிலத்தில் அயல்மொழியாம் களைவிளைச்சல் மிகுதி!
தமிழ்நிலத்தில் தமிழ்க்கொள்கை எனும்விளைச்சல் குறைவு!
தமிழ்நிலத்தில் அயற்கொள்கைக் களைவிளைச்சல் மிகுதி!

தமிழ்நிலத்தில் தமிழ்ஒழுக்கப் பயிர்விளைச்சல் குறைவு!
தமிழ்நிலத்தில் அயலொழுக்கக் களைவிளைச்சல் மிகுதி!
தமிழர்களே களைநீக்க வேண்டாமா? உங்கள்
சமையஉளத் தாலன்றித் தமிழ்உளத்தால் சொல்க!''

''தாய்த்திருநா டுயர்வெய்தும் நாளெந்த நாளோ?
தமிழ்உயரும் நாளெந்நாள்'' என்றவனும் கவன்றான்!
வாய்த்தசெல்வம் அத்தனையும் ஏழையர்க்கே உதவும்
வழிசெய்ய வேண்டுமெனத் தமிழரைக்கேட் கின்றான்!
நோய்த்தமிழர் நோயுள்ளம் நோய்நீக்கி-நாட்டின்
நொடிவெல்லாம் நீங்கிநலம் பெறுதலென்றே என்று
வாய்த்தமிழில் பாடியுளம் ஏங்கித்தவித் திட்டான்!
வருங்காலக் கனவுநலம் கூறுகின்றான் கேட்பீர்! 45

''என்னருமைத் தமிழ்நாட்டை எழிற்றமிழால் நுகரேனோ?
செவியில் யாண்டும்
கன்னல்நிகர் தமிழிசையைக் கேளேனோ? கண்ணெதிரில்
காண்ப வெல்லாம்
தன்னேரில் லாததமிழ்த் தனிமொழியாய்க் காணேனோ?
இவ்வை யத்தில்
முன்னேறும் மொழிகளிலே தமிழ்மொழியும் ஒன்றெனவே
முழங்கே னோநான்!''

5 வீரம்

வீரம்அவன் பாக்களிலே செறிந்தோடி நிற்கும்!
விளையாட்டுத் தமிழ்ப்பேச்சும் வெந்தணலாய்க் காய்ச்சும்!
ஈரம்அவன் தமிழ்ப்பாட்டில் இருந்தாலும் எதிரி
எலும்பினையும் நீறாக்கும் சொற்கள் விளையாடும்!
பாருங்கள் வகைக்கொன்றாய்ப் பாவேந்தன் உள்ளம்
பகைமுன்னம் கனல்கக்கும் வரிகளைச்சொல் கின்றேன்
சேருங்கள் ஒருமனமாய்! ஒருடலாய்! உயிராய்!
செந்தமிழின் பெரும்படையில் சேருங்கள் இனியே! 46

''தமிழர்க்குத் தொண்டுசெயும் தமிழனுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப் போகும்.''

"இருளினை வறுமை நோயை
இடறுவேன்; என்னு டல்மேல்
உருள்கின்ற பகைக்குன்றை நான்
ஒருவனே எதிர்ப்பேன்"

'செழிப்போரே! இளைஞர்களே!
தென்னாட்டுச் சிங்கங்காள்!
எழுகநம் தாய்
"மொழிப்போரே வேண்டுவது!
தொடக்கஞ்செய் வீர்வெல்வீர்!
மொழிப்போர் வெல்க!

"கடல்போலும் எழுக! கடல் முழக்கம்போல்
கழறிடுக! தமிழ்வாழ் கென்று!
கெடல் எங்கே தமிழின் நலம்? அங்கெல்லாம்
தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!"

"அரசிருந்த தமிழன்னை ஆட்சியிலே
சூழ்ச்சி செய்யும் ஆட்கள் யாரும்
எரிசருகு! தமிழரிடை எழுச்சியுறும்
தமிழார்வம் கொழுந்த தீ! தீ!"

"சிம்புட் பறவையே சிறகை விரி! எழு!
சிங்க இளைஞனே திருப்புமுகம்! திற! விழி!

....

வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையிருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணுக் கடல்போல் மாப்பகை மேல்விடு!
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு!"

"மனிதரில் நீயும்ஓர் மனிதன்; மண்ணன்று!
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து உலகத்தை!
இதுஉன் வீடு"

—''சிறுத்தையே வெளியில்வா!
எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலியெனச் செயல்செயப் புறப்படு வெளியில்!''

''கைவிரித்து வந்த கயவர் நம்மிடைப்
பொய்விரித்து நம் புலன்கள் மறைத்துத்
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி
நமக்குள உரிமை தமக்கென் பாரெனில்
வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற் றெங்கே? விழிப்புற் றெழுக''

''தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனைஎன்
தாய்தடுத் தாலும் விடேன்''

''தமிழ்எங்கள் உயிரென்ப தாலே—வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே''

''உயர்தமிழ் உயர்நடை உயர்தனி வீரம்
இங்கிவை தமிழரின் உடைமை''

எப்படித்தீ எழுப்புகின்ற செழுங்கூர்மைச் சொற்கள்!
ஈட்டியென-வேல்களென எதிரிகளின் நெஞ்சில்
அப்படியே போய்ப்பாய்ந்து குலைநடுங்க வைக்கும்!
அலையலையாத் தமிழினத்தின் வெற்றிகளைக் குவிக்கும்!
இப்படியார் எழுதியவர்? இழிவயிற்றுப் பசிக்கே
எழுதிநலந் தேடிடவே எல்லாரும் பாடி
முப்படியாய்த் தமிழ்நலத்தை தமிழினத்தைத் தீய்த்தார்!
மூண்டுவந்த எரிமலையாய்ப் பாவேந்தன் எழுந்தான்! 47

கம்பன்முதல் கண்ணனுக்குத் தாசன்வரை எல்லாம்
'கலி'யெழுதிப் பாட்டெழுதி உடல்வளர்த்த நாட்டில்
கொம்புயர்ந்த காளையென அரிமாவே என்ன
கொடுமுடியில் வீழ்ந்தஇடி முழக்கத்தைச் செய்து
நம்பிறழ்ந்த நிலையினையும் நம்மிழிவும் போக்க
நானென்றே எழுந்துவந்தான் பாவேந்தன் போல—
சிம்புள்எது? வேங்கைஎது? அடடா,ஓ! சீ!சீ!
சீரழியும் உடலுக்குள் மானமன்றோ வீரம்! 48

௬. தமிழ்

செந்தமிழ்மேல் பாவேந்தன் வைத்தபெரும் அன்பை
சிறுமைபெற வெறியென்னும் வெறிநாய்கள் மட்டும்
தந்தம்மொழி மேல்வைக்க விலையாஇந் நாட்டில்!
தாய்மொழிமேல் அன்புவைத்தே இனம்பேணல் தீதா?
இந்திமொழி மேலவர்கள் வெறியின்றித் தானே
'எல்லாரும் இந்திபடித் திடுக'என மொழிவார்!
சொந்தமொழிக் குயர்வின்றி இனந்தாழும் போது
சொத்தைமொழி-பிறமொழியைப் போற்றுவதே தீது! 49

பாவேந்தன் தமிழ்க்காதல் இயற்கை;அதில் தாழ்ச்சி
பகருவதே தாய்மொழிமேல் பற்றற்ற செய்கை!
ஈவேந்தும் தாயன்பு கொழித்திடும்தாய் மொழியில்!
எந்தாய்மேல் பற்றுவைக்கும் உணர்வு,வெறி என்றால்
சாவேந்தும் அக்கொள்கை; சழக்கேந்தி வீழும்!
சரிநிகர்க்கும் தாய்மொழியும் பிறமொழியும் என்றே
நாவேந்திக் கூறிடினும். ஒப்பிவிடோம் யாங்கள்!
நந்தமிழர் முன்னேற்றம் செந்தமிழ்முன் னேற்றம்! 50

நேற்றுவந்த இந்திமொழி தேசமொழி என்றால்,
நிலத்துமொழி யாவினுக்கும் தாயாகி நிற்கும்
ஊற்றுமொழி, உணர்வுமொழி, உண்மைமொழி,இந்த
உலகத்து மொழிகளுக்கும் மூத்தமொழி, மேலோர்
ஏற்றமொழி, இயற்கைமொழி, இனியமொழி, பண்டை
இலக்கியமும் இலக்கணமும் செறிந்தமொழி, இன்னும்
வேற்றுமொழி யாவையுமே கருவுயிர்க்காப் போதில்
விளைந்துபெரு மரமாகி நிற்குமொழி தமிழாம்! 51

செந்தமிழைத் தாய்மொழியென் றொருமுறையால் மட்டும்
சிறப்பதன்மேல் சாற்றவில்லை; தாய்ஊமை யானால்
சொந்தமென ஒன்றிருக்கும்; உயர்வென்றால் சரியோ?
சொல்லுகின்ற சிறப்பெல்லாம் உலகப்பே ரறிவோர்
தந்தசிறப் பன்றோ?நம் தாய்என்றால் மட்டும்
தகுதியிலாப் பெருமையெலாம் உரிமையென்றே ஆமோ?
முந்துசிறப் பெனில்உலகம் ஒப்புதல்வேண் டாமோ?
முத்தமிழின் முழுச்சிறப்பில் எத்தவற்றைச் சொல்வீர்? 52

மறைமலையடிகள் பிள்ளைத் தமிழ்.

புலவர். இறைக்குருவனார்

26

(வேறு)

பண்டைப் பாண்டியர் கண்டன கழகம்
பட்டு மறைந்தமையின்
பைந்தமிழ் நாளும் நைந்திழி நிலையைப்
பார்த்துளம் நனிவேர்ப்புக்
கொண்டுயர் கூடலில் பாண்டித் துரைமகன்
கூட்டிய [1]கழகத்துக்
குலவிய நலமிகு புலவோர் தாமுங்
[2]கோமக னும்போற்றப்
[3]பண்டைத் தமிழர் ஆரியர் இயல்புகள்
பாரித் துரைசெய்து
பரவு புரட்சிக் கொடியை யுயர்த்திப்
படையும் நடப்பித்துத்
[4]தண்டத் தலைமையின் கொண்டனை வாகை
தாலோ தாலேலோ!
தண்டமிழ் தழையத் தழையுங் கொண்டல்
தாலோ தாலேலோ!

27

பரவுறு மயலவர் சமய மெலாமிப்
பைந்தமிழ் நிலவரையில்
பழமைச் சிவநெறி தளர்வுறு மாறே
பன்னெடு நான்முதலா

26—1. மதுரையில் பாண்டித்துரையார் நிறுவிய நான்காந் தமிழ்க் கழகம்.

2. 'கோமான்' — பாண்டித்துரையார்.

3. "பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும்" என்னும் நூல் மதுரைத் தமிழ்க் கழகத்தில் அடிகளார் நிகழ்த்திய சொற்பொழிவு.

4. தண்டத்தலைமை—படைத்தலைமை.

விரவுத லுறலின் தமிழர் மருண்டு
வீழும் நிலைக்கண்டு
விழைவுறும் [1]இந்து மதப்பற் றவையம்
விளங்கக் கண்டதொடும்
உரமிகு சான்றோர் பரவுசெந் நெறியின்
உயிர்முடி புலகுகொள
ஊர்நகர் தோறும் கிளைபல கொண்டே
ஒள்ளிய பணிசெய்யும்
தரமிகு [2]பேரவை நிறுவிய பெரும
தாலோ தாலேலோ!
தண்டமிழ் தழையத் தழையுங் கொண்டல்
தாலோ தாலேலோ!

28

[1]உனற்கரி யனவாம் நுண்ணிய வாற்றல்
உடைமையை உணராதே
உலகவர் நாளுங் கலகம் விளைத்தனர்
உறுபயன் காண்கிலராய்க்
[2]கனக்க வுயர்ந்தினி வாய்த்த பிறப்புக்
கழியச் செயலொழியக்
கருதிய வெல்லாங் கருதிய வாறே
கண்டு சிறப்புறுவான்
[3]மனக்கவர்ச் சியெனும் [4]அருமந் துறழும்
மாட்சியின் உயர்கலை நூல்
மன்னுறு தமிழில் ஆக்கி வழங்கி
மட்டறு புகழ்கொண்டோய்
[5]தனக்குத் தானே நிகராந் தமிழ்மகன்
தாலோ தாலேலோ!
தண்டமிழ் தழையத் தழையுங் கொண்டல்
தாலோ தாலேலோ!

27—1. 'இந்து மதாபிமானிகள் சங்கம்' அடிகளார் நாகையில் இளமைக் காலத்தில் நிறுவியது.
2. ''சைவசித்தாந்த மகாசமாசம்' அடிகளாரால் நிறுவப் பெற்றது.

28—1. உனற்கு + அரிய.
2. கனக்க—மிகவும்; கனம் தமிழ்ச்சொல்லே.
3. மனக்கவர்ச்சி—அடிகளாரின் நூல் (மனிதவசியம்)
4. அருமருந்து எனற்பாலது அருமந்து என நின்றது.
5. (தனக்குப்பிறர்) நிகரிலாமை கூறியவாறு.

29

அலைவுறு நெஞ்சக நினைவுகள் தம்மை
அடக்கி முயன்றினிதே
ஆங்கதை யொருவழி வைத்தினி தாளும்
ஆற்றல் மிகப்பெற்றார்
தொலைவினில் உள்ளன நிகழ்வன கண்முன்
தோன்றுங் காட்சியெனத்
தோற்ற மளித்திட உணர்தல் உணர்த்தல்
[1]தோமறு முறைகாட்டி
நிலைபெறு செந்தமிழ்க் கலைவளம் மேன்மேல்
நீடிய [2]நூல்செய்தோய்
நெடிதே அடிமையின் எம்மவர் [3]தாழ்தலை
நிமிரச் செய்பணியில்
தலைமையின் ஓங்கிய பெருமையன் எந்தை
தாலோ தாலேலோ!
தண்டமிழ் தழையத் தழையுங் கொண்டல்
தாலோ தாலேலோ!

30

நிலைபெறும் உயிரினம் உய்வுறு மாறே
நிறையரு ளாலிறைவன்
நிலவினின் ஆக்கிய உடல மழிந்திட
நிரம்ப வருந்தியுயிர்க்
குலைநடுக் குறுமா றிரங்குத லின்றிக்
கொலைசெய் தீவினையும்
கொள்ளுந் தன்னூன் பெருகப் பிறவூன்
கொள்ளும் இழிவினையும்
அலைகடல் சூழும் நிலவயின் முதல் வந்(து)
அழியா தென்றென்றும்
ஆண்டருள் மாட்சியின் மிக்க பசுந்தமிழ்
ஆன்றோர் தவிர்கென்னுந்
தலைமை யறங்கள் என்றருள் அந்தண
தாலோ தாலேலோ!
தண்டமிழ் தழையத் தழையுங் கொண்டல்
தாலோ தாலேலோ!

29—1. தோம—குற்றம். 2. தொலைவிலுணர்தல்—அடிகளாரின் நூல். 3. தாழ்தலை—வினைத்தொகை (இறந்த காலம்).

30—1. கொல்லாமை, புலான் மறுத்தல் ஆகியவை தமிழரின் தலையாய அறங்கள் என்றது அடிகளார் "சீர் திருத்தக் குறிப்புகளுள் ஒன்று. 'சீர் திருத்தக் குறிப்புகள்" துண்டு வெளியீடாக வந்தது.

தனிம வரிசை

இல. க. இரத்தினவேல், அறி. மு.
பூதவியல் துறை, மதுரை மருத்துவக் கல்லூரி.
மதுரை-20.

11. அன்றிமுனி! (ANTIMONY) Sb^{121}_{51}

"கனியேதும் வறியசெங் காயேனும் உதிர்சருகு
கந்தமூ லங்க ளேனும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனி யாகித்
தனியே இருப்பதற் கெண்ணினேன் எண்ணமிது
சாமிநீ அறியாத தோ?"

தனியே யிருந்த அக்காலத் துறவிகள் நோன்பு நோற்பது வழக்கம். நோன்பால் உடல் இளைப்பதைத் தடுக்க என்ன செய்யலாம் என ஏடுகளை யெல்லாம் புரட்டினர். பேசில் வாலண்ட்டின் (Basille Valentina) என்ற மதகுரு 'அன்றிமுனியின் வெற்றித்திருத் தேர்' (The Triumphant Chariot of Antimony) என்ற நூலுள் 'அன்றிமுனி பொன்னைப் புடமிட்டுக் கசடுகளை அகற்றுவதைப் போலவே, மக்களையும் விலங்குகளையும் தூய்மையாக்கவல்லது'' என எழுதி ஏட்டைக் கெடுத்தார். நோன்பால் உடல் தளர்வதைத் தடுக்க விரும்பிய அத்துறவிகள் அன்றிமுனியை அவாவித் தின்றனர். ஆனால் அந்தோ! அவலமுற மாண்டனர்.

இதனால் antimony என்பதன் வேர்ச்சொல்லாம் anti + monos என்பதை anti- அல்—அன் - அன்றி; monos - தனியர்; தனியே யிருப்பவர் துறவியர் தனியரான முனிவருக்கு அல்லாதது; எதிரானது; ஆகாதது—"துறவியருக்கு ஆகாதது'' எனக் கேலியாய்ப் பொருள் உரைத்தனர்.

Antimony இன் மெய்ப்பொருள்: ஏனையவற்றை மூனிந்தால் தனித்திருக்க நேரிடும்! தனித்து இராதது அன்றிமுனி. அஃதாவது இந்த மாழை தனியே கிடைப்பதில்லை. "அன்றித்தனியன்'' என்ற பொருளில் antimonos-antimony என்று பெயர் பெற்றது. மேலும்

அன்றிமுனி தனிம நிலையில் பயன்பெறுவதும் இல்லை! antimony-ஐ ஒட்டிய பலுக்கலாகத் தமிழில் இதனை அன்றிமுனியென்றே இப்போதைக்கு அழைப்போம்!

தொல் வரலாறு: கி.மு. 4000 வாக்கில் கிடைத்த சாலடிய நாட்டுக் கலங்கள் அன்றிமுனியால் செய்யப்பட்டிருந்தன. எனவே அக்காலத்தார் 'அன்றிமுனி'யை அதன் தாதுக்களில் இருந்து பிரிக்கும் முறையை அறிந்தமை தெரியவருகிறது. கீழ்த்திசை மகளிரும், எகிபதியப் பெண்டிரும் கண் மைக்கு இதனைப் பயன் படுத்தினர்.

அக்கால வழக்கத்துக்கு ஒப்ப அன்றிமுனி ஆண், பெண் எனப் பால்பகுப்புக்கு உட்பட்டிருந்தது. பிளினி கூறுகிறார்: பெண் அன்றிமுனி மிகவும் விரும்பப் பெறுவதாகவும், கதிர்ப்புடையதாகவும், மென்மையானதாகவும், ஒளிமிக்கதாகவும் விளங்கும்.

16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சார்சு அஃறிகோலா என்பவர் மாழை அன்றிமுனியை நன்கு அறிந்தவர். அவரே, எழுத்து அச்சு வார்ப்புக்கு வன்மையூட்ட இது உதவுவதைத் தெரிவிக்கிறார்.

மாழை அன்றிமுனி நெடுங்காலமாக அறியப் பட்டதாயினும், அன்றிமுனியின் தனிமத்தன்மை 1450-இல் தான் நிறுவப்பட்டது. தொடக்கத்தில் குறித்த அவ்வெற்றித்திருத்தேரை ஒட்டி இதன் தனிமத்தன்மையை மெய்ப்பித்தவர் பேசில் வாலண்ட்டின் தான்!

நிக்கோலசு லீமெரி: அன்றிமுனியைப் பற்றிய முறையான அறிவியல் ஆய்வை முதன்முதலாக நிகழ்த்தியவர் நிக்கோலசு லீமெரி என்ற பிரெஞ்சு இயைபியல் வல்லுநர் ஆவார்! இவர் 1645 நவம்பர் 17-இல் ரூவன் (Rouen) என்ற இடத்தில் பிறந்தார். மருந்தியலில் தொடக்கக் கல்வியை முடித்தபின் மேற்கல்விக்காகப் பாரிசுக்குப் போனார். அங்கிருந்த இயைபியல் விளக்குநர் தமக்கு ஒத்துவராத தால் விலகினார். பின், அவர் காலத்தில் இயைபியலில் சிறந்த வல்லுநர்களின் உரைகளைச் செவிமடுக்க ஊரெல்லாம் சுற்றினார் பெரும் மேதையானார். மருத்துவப் படிப்பைவிட, இயைபியல் சார்ந்த மருந்தியல் படிப்பையே விரும்பிக் கற்றார். அவரது சொற்பொழிவு களைக் கேட்பதற்காகவே மக்கள் கூட்டம் தொடர்ந்து அவரது ஆய்வுக்கூடத்தை 'முற்றுகை'யிட்டு வந்தது. லீமெரி உருவாக்கிய

மருந்துகளும் அழகூட்டும் பொருள்களும் பெரும் ஊதியத்தை ஈட்டித் தந்தன; அவரது இயைபியல் பொத்தகம் மீண்டும் மீண்டும் அச்சிடப் பெற்று விற்பனையாயிற்று.

அன்றிமுனித் தனிமம்: தகட்டுப் படிவங்களாகவும், ஊசிப் படிகங்களாகவும் விளங்குகின்ற இந்த அன்றிமுனி, கனமிக்க, முறியக்கூடிய, கரிய, ஒளிரும் மணமற்ற, சுவையற்ற ஒரு தனிமம் ஆகும்.

தீயில் புடம் இடும்பொழுது பிற மாழைகளைத் 'தின்று விடுவதால்', இதனை 'செவ்வரிமா' என்றும், 'கோநாய்' என்றும் பழைய இயைபியலாரான இதளியர்கள் (alchemists) அழைத்தனர். தூய்மையான தங்கத்துடன் அன்றிமுனியைச் சேர்த்தால் அன்றிமுனி தங்கத்தைத் 'தின்று விடுகிறது'. பின் அதனைப் புடமிட்டால் தங்கம் புத்துயிர் பெற்று எழுகிறது. அக்கால இதளியர்களின் பட விளக்கத்தில் தங்கம் அரசனாகவும், வெள்ளி அரசியாகவும் அன்றிமுனி கோநாயாகவும் உருவகிக்கப் பட்டிருந்தன.

அன்றிமுனி எந்த மாழையுடனும் எளிதில் இயைவதால் இதனைப் பல்வேறு ஈயப்பெயராலும் அழைத்தனர். இலத்தீனில் இது antimonium என்றும் stibium என்றும் வழங்கப்பெறும். பின்னர்க் குறித்த சொல்லில் இருந்துதான் இதன் குறியீடு Sb உருவாக்கப் பெற்றது.

அன்றிமுனித் தூய்மை: அன்றிமுனித் தாதுவை உருக்கி இரும்புச் சல்லடை வழியாக ஊற்றித் தூய்மைப்படுத்தலாம்.

முரணிய விரிவு: உறையும் அன்றிமுனி பருமளவில் விரியக் கூடியது. ஈயத்துடன் அன்றிமுனியைச் சிறிதளவே கலந்தால்கூட அது வன்மை மிக்கதாய் விடும். இப்பண்புகளால், அச்சுவார்ப்பு மாழையில் ஈயம், வெளியத்துடன் 13 முதல் 30% வரை அன்றிமுனியைக் கலப்பர். இதனால் அச்செழுத்துகள் வன்மைமிக்கதாக ஆவது மட்டுமன்றி, அச்சு வார்ப்புகள் உறையும் போது விரிந்து எழுத்துகள் துல்லியமானதாக விளங்கும்.

உராய்வுத் தடுப்புத் தாங்கிகளில் ஈயத்துடன் 10% முதல் 18%- வரை அன்றிமுனி சேர்க்கப்படுகிறது. மின்சேமக்கல ஈயத்திலும் வலிமையூட்ட அன்றிமுனி பயன்படுகிறது.

தாழ்ந்த உருகுநிலை: இத்தனிமத்தின் தாழ்ந்த உருகுநிலைப் பண்பால் இஃது ஏனைய மாழைகளுடன் எளிதில் கலக்கிறது; பற்றவைப்புக்குப் பயன்படுகிறது. மேலும் தீக்காப்பான் ஆகவும் இது உதவுகிறது.

மின்கடத்தம்: கல்லி எனப்பெறும் சிலிக்கா(silicon)னுக்குரிய திரிநிலை மின்கடத்தும் பண்பு (semi conductor property) அன்றிமுனிக்கும் உண்டு

கூடிகைகளின் பயன்கள்: அன்றிமுனி ஒரு நிறமி (colouring agent) ஆகும். 'அன்றிமுனி மூவுயிரகை' நெசவு வேலையில் சாயந்தோய்க்கவும் மற்றும் வெடி மருந்துத் தொழிற்சாலைகளிலும் இழுவைத் தொழிலகங்களிலும் பெரிதும் பயன்படுகிறது.

அன்றிமுனி உயிரகை கல்லியைப் போலவே பளிங்கு உருவாக்கத்தில் பங்கு பற்றுகிறது.

மருத்துவத்தில்: இத்தனிமம் நச்சுத்தன்மை மிக்கது. குலைத்துடிப்பையும் மூச்சுயிர்ப்பையும் சீர்கெடுத்து நரம்பு மண்டலத்தைத் தாக்கும்.

லெய்சுமனிப நோயின் (Leishmaniasis) விளைவான கருங்காய்ச்சல் (kala azar) முதலானவற்றுக்கான 'அன்றிமுனி காளிய டார்ட்ரேட்' (antimony potassium tartarate) என்ற மருந்திலும், மற்றும் 'அன்றிமுனி லிதியம் தயோமலேட்' (autimony lithium thiomalate) என்ற புழுநோய் நீக்கியிலும் அன்றிமுனி முகாமைப் பங்கு பற்றியுள்ளது.

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	12 உருபா	24 உருபா	24 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	12 ,,	12 ,,
தனியிதழ்:	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எழுதிக் கேட்க!

[சுவடி: 14, ஓலை: 3 இதழின் தொடர்ச்சி.]

திருவள்ளுவர் யார்?

சேலம், புலவர். க. நடேசனார்

(ஆசிரியர் நடையினது)

மேலும் 'எண்குணத்தான்' என 9-ஆம் குறளில் வரும் சொல் சைவாகமச் சொல்லே; சைவாகம மரபு பற்றிக் கடவுள் எண்குணத்தான் எனக் கூறப்பட்டார் எனப் பரிமேலழகரே இதனை உடம்படுவர்.

> "எண் குணங்களாவன தன் வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல் இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை என இவை, இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டன. (9—ம் குறளுரை)

இவ்வாறு பரிமேலழகர் எழுதுவதுங் காண்க. நாதமாத்திரையாகிய இயற்கைப் பிறப்பு, அகரத்துக்குத் தலைமை நல்கும் என அவர் முதற் குறளுரையில் குறித்ததும் இச் சைவாகமக் கருத்தையறிந்தே எனவுங் கொள்ளலாம். இதனாலும், திருக்குறள் கடவுள் வாழ்த்ததிகாரம், சைவாகம மரபுபற்றியும் 36 தத்துவக்கொள்கை பற்றியும் எழுந்த அருவக் கடவுள் வாழ்த்தாக—தத்துவங் கடந்த தனி முதல் கடவுள், தத்துவத்துட் படும் வகைமையை வழுத்திப்போற்றும் வாழ்த்தாக—முடியும். பகவன், வாலறிவன், இறைவன், எண்குணத்தான் என்ற இப்பெயர்கள் சிவாகம மரபுபற்றிய கடவுட் பெயர்கள். ஆகவே கடவுள் வாழ்த்ததிகாரத்துக் காணப்படும் மற்றைய பெயர்களும் இனம்பற்றிச் சிவாகம மரபின எனத்தெளியலாம்; ஐயமின்றித் துணியலாம். இவ்வதிகாரத்தில் வரும் தாள்தலைவணக்கம் என்பதும் ((9) இச்சிவாத்துவிதத் தென்னெறியில், தத்துவ அறிஞர் தம்வாணுளில் அருவக் கடவுளோடொன்றி இருத்தலையே குறிக்கும் என்பதைப் பின்னர் விளக்குவேன். எனவே திருக்குறள் கடவுள் வாழ்த்தில் 'இறைவனடி சேர்த்தல்' (10) என வருவது, லக்ஷ்மீசகித பூமிநீளாநாயக விலக்ஷண விக்கிரகயுக்த ஸ்ரீவைகுண்ட நாதக் கிங்கரஸ்வபாவனுகை (விநோதன். 19) அன்று.

கண்ணபிரான் 'அக்ஷராணும் அகாரோஸ்மி' என்று கீதையில் கூறுவது கொண்டும் பிறவாற்ருலும் குறளில் வரும் ஆதிபகவன், கண்ணபிரானே எனக்கருதும் வைணவரும் உண்டு. ஆன்மாவைத் தவிர வேறு கடவுளில்லை எனத் தத்துவப்பொருள் பேசும் ஒரு பொருட் கொள்கையர்கூட — ஏகான்மவாதியர்கூட — சிவபூசை முதலியன

செய்வர்; சிவவேடம் பூண்பர். இதனால் அவர்களைச் சிவதத்துவத்தர், சிவநெறியர் எனக் கூறலாமா? ஏதோ சிவபூசைக்கு இந்நாட்டிலிருந்த மதிப்பைக்கண்டு கைக்கொண்டு வெளியே சிவபூசை செய்வதுபோலச் சில செய்து காட்டுவர். ஆனால் அவர்கள் உபதேசிக்கும் உபதேசமும் அந்தரங்கத் தத்துவக் கொள்கைகளும் வேறு; சிவபூசைக்கும் சிவதத்துவக் கொள்கைக்கும் மாறானவை. இத்தகைய நடவடிக்கைகளைத் தான்—'வல்லுருவம்' பூண்டு 'வலியில் நிலைமை' யுடைய 'வஞ்சமனத்தாரின் படிற்றொழுக்க'த்தைத்தான்—உள்ளே ஒருவகைத் தத்துவம், வெளியே மற்றொருவகை ஒழுக்கம்; வெளியே சிவவேடத்திருநீற்றுப் பூச்சு, உள்ளே கேசவாதி நாராயண மனனப்பேச்சு; செய்வது வைதிகக் கொள்வேள்வி, பேசி நடிப்பது அகிம்சா தர்மம்; இவற்றைத்தான்–வள்ளுவர் 'கூடா ஒழுக்கம்' என்னும் அதிகாரத்தில் பலவகை உவமானங்காட்டி விவரித்து விளக்குவர். இப்படித்தான் பொருட்பேறின்றிக் கண்ணபிரானும் கூறியிருக்கலாம்; அகரத்திற்கு ஏதோ சிறப்பிருக்கிறதே, அதுவே நான் என்று கூறிவைப்போமே எனக்கருதி,

> "எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே"

என்று கூறியிருக்கலாம்; அந்த அத்தியாயத்தில் இது மட்டுமா கூறுகின்றார் கண்ண பகவான்!

> "கவீனும் உசநாகவி;" (10.37)

தெளிந்த அறிஞரில் யான் சுக்கிரன் எனவுங் கூறுகிறார். இதனால் அசுரகுரு சுக்கிராசிரியரின் பெருமைதான் பெறப்படுமே அன்றிப் பொருட்பேறு வேறுயாதும் இல்லை. இங்ஙனம் கூறிய பகவான் தான், ஒரு சமயம் வாமனபகவானாகிச் சுக்கிர பகவானை—அசுர சிவாசாரியனை—அரச்கர் குருவை—தமிழ்மறையோசனை—குடிமறையோனை—அறுங்கண்ணனாக்கினார்; குருட்டுக் கண்ணனாக்கினார் என்று புராண இதிகாசங்கள் முழங்கும். இவ்வாமநாவதார வைபவம், சர்வஜகத்ரக்ஷகத்துவம் என வைணவர் கூறுவர். கண்ண பகவான் பேச்சும் அவர் நடத்தையும் எப்படியுள்ளன? கேசவாதி வைதிகப் பேச்சும் ஆகம விபூதிப் பூச்சும் போலத்தானே உள்ளன! ஆகவே கண்ண பகவான், 'எழுத்துக்களில் அகரமாகின்றேன் நானே' என்று கூறியதுங்கூட மெய்ப்பொருள் படுவதன்று, அகரத்தைத் தத்துவ வகையோடு இனயபு படுத்திப் போற்றுவன ஆகமங்களே. ஆதலின் சைவாகமங்களுக்குத்தான் இதன் மெய்ப்பொருள்–தத்துவத் தன்மை–உரித்தாகும்; பொருந்தும். மற்றவர்கள் பெருமைக்காக் இதனை இரவலாக வாங்கிக் கையாளுவர்; கூறிக்கொள்வர். அவர்களின்

சமயத் தத்துவங்களோடு இதற்கு இயைபு இருக்காது. ஆதலின் கண்ணபகவான் மரத்தில் அரசு, பறவையில் கருடன், விலங்கில் சிங்கம், வினையில் சூது (10-36), எழுத்துக்களில் நான் அகரம் என்று பலப்பல பேச்சோடு பேச்சாய் ஏதோ அகரத்தைக் கூறியுள்ளது கொண்டு திருக்குறளில் வரும் அகரமும் ஆதிபகவனும் வைதிக வைணவர்க்கே உரியன எனல் ஆகாது. அகரம் அனைவர்க்கும் பொதுவாயினும் இதனை உலகத்தோற்ற ஒடுக்கத் தத்துவத்துட் படுத்தித் தனிச்சிறப்பு தருவோர் சிவதத்மிவத்தோர். ஆகவே வள்ளுவர் கூறிய அகரம், சதாசிவ தத்துவம்; 'அகராதி மாலிங்கத்து ஆகி அவைகூடித்தக ஆம் ஓங்காரச் சதாசிவம்' (சிவப்பிரகாசர்) எனத் தெளிக.

'பொறிவாயில் ஐந்தவித்தான் என்றது கண்ணபிரானை; பொய்தீர் ஒழுக்கநெறி என்றது பகவத்கீதையை; கண்ணபிரான் நைஷ்டிக பிரம்மசாரி என்பதனைப் பாரதத்தில் பரீக்ஷித்து மஹாராஜன் பிறப் பால் உணர்க என்று உணர்த்து வாருண்டு; (விநோதன் பக். 28) கண்ணபிரான் ஐந்தவித்தான் என்பதை ஒருவாறு ஒப்புக்கொள்ள லாம். ஏன்? நாம் கண்ணனைக் கண்டதில்லை, காணவும் இயலாது. நாம் காணாத கண்ணனைப் பிரம்மசாரி என்று பாரதம் கண்டு கூறு கிறது. எனவே இது உண்மையாக இருக்கலாம்; ஒப்பலாம். ஆனால் மற்றொன்றை—பகவத்கீதையைத்தான் வள்ளுவர் பொய்தீர் ஒழுக்க நெறி எனக்குறிப்பிட்டார் என்ற செய்தியை—இப்படி ஒப்புக்கொள்ள முடியாது. ஏன்? பகவத்கீதையை நாம் இன்றும் காணலாம். அதனை வள்ளுவர் குறளோடு ஒப்பிட்டும் நோக்கலாம். முடிவு காணலாம். எப்படி?

(அ) கீதை எதன் பொருட்டு எழுந்த நூல்? ஆசான், மூதாதையர் முதலியோரைக் கொல்லல்தகாது என்று கொலைச் செயலைக் கைவிட்ட அருச்சுனற்கு மெய்ப்பொருள் உணர்த்துவதற்காக எழுந்த ஞான நூல். யாரையும் கொல்லலாம்; கொலைவினையும் அறமாம்; 'கொலை' 'கொல்லாமை' என்று வேறு பிரித்தெண்ணுவது அஞ்ஞான மயக்கு என்ற இத்தகைய கொள்கைகட்கும் வருண தர்மத்துக்கும் கொலை வினை வேள்விக்கும் முதன்மை கொடுத்து வற்புறுத்துவதற்காகவே எழுந்த நூல். வள்ளுவர் நூலோ 'கொல்லாமை சூழும் நெறியே நல்லாறு' (324). 'கொலைவினையாகிய மாக்கள் புலை வினையர்', 'ஒன்றாக நல்லது கொல்லாமை' 'அறவினையாதெனிற் கொல்லாமை;

கோறல்பிறவினை' 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்றித் தகைய செய்திகட்கு முதன்மை தருவது.

(ஆ) கீதையில் பகவான், "வேள்வியில் எஞ்சம் அவிப்பிரசாதம் உண்போர் அழியாப் பிரமத்தை அடைவர்; வேள்வி செய்யாதவர்க்கு இந்த உலகமே இல்லை (யக்ஞ சிஷ்ட அம்ருதபுஜோயாந்தி பிரம்மஸ நாதனம்; ந அயம்லோகோ அஸ்தி அயக்ஞஸ்ய—4. 31) என வேள்வியையும் அவிப் பிரசாதம் உண்பதையும் மிக உயர்த்திப் பேசுவர். ஆனால் திருக்குறளில் வள்ளுவர் "தேவரைத் தொழுவதற்காக உயிர்வதை செய்து, அவி சொரிந்து, புலைச்சடங்கியற்றி, வேள்வி புரிந்து இவ்வுலகில் வாழும் வாழ்வு தாழ்வு. ஏன்? கொல்லாதவனை, புலாலுண்ணாதவனை, தேவருட்பட எல்லா உயிரும் கைகூப்பித் தொழும்" (259, 260, 329) என வேள்வியையும் அவிப் பிரசாதப் புலை உணவையும் மிகமிகத் தாழ்த்திப் பேசுவர்.

(இ) கீதையில் கண்ண பகவான், இந்திரனையும் தேவர்களையும் "தேவர்களில் யான் இந்திரன்" (தேவானாம் அஸ்மிவாஸவ;) எனப் போற்றுவர். வள்ளுவரோ, "தேவரனையர் கயவர்" "இந்திரனே சாலும் கரி" எனத் தூற்றுவர்.

(ஈ) கண்ணபிரான், "பிரம்மா எக்ஞத்தோடு மக்களை உண்டாக்கி உலகியற்றி, இவ்வேள்வி, விரும்பும் நலமெல்லாம் தருமென முதன் முதலில் வேதவாக்கருளினார்" (ஸஹ யக்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி:—3. 10) எனப் பிரம்மனையும் அவன் வேத வாக்கையும் உவந்துரைப்பர்; புகழ்வர். வள்ளுவரோ, உலகியற்றியானை—பிரமனை—"பரந்தும் கெடுக உலகியற்றியான்" என வெகுண்டுரைப்பர்; இகழ்வர்.

(உ) கண்ணபிரான், பிறவிச் சாதி நான்கும் என்னால் உண்டாக்கப்பட்டன—சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம் (4. 13) உயர் சாதித் தொழிலைச் சிறப்புறச் செய்து வாழ்வதைக் காட்டிலும் தன் சாதித் தொழிலை அரைகுறையாய்ச் செய்தேனும் வாழ்வதே மேலானது. உயர்சாதித் தொழிலால் நல்வாழ்வடைவதைவிட, தன் சாதித் தொழிலில் இறப்பதே மேலாம்—ஸ்ரேயான் ஸ்தவர்மோ விகுண; பரதர்மாத் ஸ்வனுஷ்டிதாத் ஸ்வதர்மே நிதனம் ஸ்ரேய: (3: 35) என விபக்தவர்ணாசிரமப் பிரிவுரவை வற்புறுத்துவர். வள்ளுவரோ, மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர். (973) கல்லாதார், மேற்பிறந்தாராயினும் கீழ்ப் பிறந்துங் கற்றாரனைத்துப் பாடிலர். (409) எல்லாவுயிர்க்கும் பிறப்பொக்கும். (972) மக்கள் ஒப்பு, உறுப்பொத்தலன்று; வெறுத்தக்க பண்பொத்தல் (993) எனக் குடிப்பண்பாம் அவிபக்த ஒப்புரவை வற்புறுத்துவர்.

(—தொடரும்)

தமிழ்த்தாய் வாழ்த்து.

'அரசபாணியார்'

(தரவு)

அமைவுற்ற நிலவுலகை அழித்தகடல் பெருவெள்ளத்(து)
இமயக்கல் எமுதருமுன் எழுகோடி பல ஆண்டும்
அமைவழியா நிலப்பகுதி அழிவறியாத் தமிழகமே
அமைத்தெழுந்த தமிழ்மொழியை அளித்ததுகாண் உலகிற்கே!

(தாழிசை)

உலகவாழ் வெனுமுறைகள் உறவாழ்ந்த திருமகளாய்
உலகுவந்த இமையவளாய் உனைத்தொழுவோம் தமிழ்அன்னய்
உலகத்தின் முதல்மொழியாய் உயர்தனிச்செம் மொழியானய்
இலக்கணத்தின் வரம்பதனல் இறவாத வரம்பெற்ருய்

அலகில்சொல் பிறர்அமைக்க அடிமுதல்கள் அளித்தனையால்
உலகின்பம் உறக்காணும் உயர்இலக்கம் உணர்த்தினையால்
உலகுவப்பப் பொதுநெறிகொள் பொதுமறையொன்
றுதவினையால்
உலகமெலாம் தழுவிஎழு உயர்அன்பு படைத்தனையால்

பழகியபின் விடல்இயலாப் பலஅயலார் பணிபுரிய
பழமைக்கும் பழையைநீ; புதுமைக்கும் புதியைநீ;
பழமையினிற் பதிந்தெழுந்த புதுமையதன் புதுமலர்நீ;
அழஉருக்கும் மணிமொழியார் அமுதமொழி அருளினைநீ

அதனல்,

என்றும் தொழுவம்உன் எழிலார் திருவடி
என்றும் மறவோம் ஏற்போம் உன்பணி
அன்பே கடவுளென் றருளினை போற்றி
என்றும் உளஉன் இறைமை வெல்க!
என்றும் உன்எழில் இளமையும் வெல்க!
வாழ்கபல் ஆண்டு வளர்க நின்புகழ்!
வாழ்கபல் ஊழி வழிவழி சிறந்தே!

ஈழத் தமிழரின் இன்றைய நிலை.

—க. அரசவினியன் (அரசமனோகரன்) பொறி.இ.
இலங்கை.

இந்து மாகடலிலே இந்தியாவின் கீழே விளங்கும் தீவே இலங்கையாகும். இங்கு சிரிலங்கா, தமிழீழம் என்று இரண்டு நாடுகள் உண்டெனினும் சூழ்நிலைக் கோளாருக முழுத்தீவுமே சிரிலங்கா எனப்படுகின்றது. தீவிலே தமிழர், சிங்களவர் என இரண்டு பெரும் இனங்கள் வாழுகின்றன. அவர்கள் முறையே தமிழ், சிங்களம் என்னும் மொழிகளைத் தாய்மொழியாகவுடையவர்சள். தமிழரிடையே சைவம், இசுலாம், கிறித்தவம் என்னும் மதப்பிரிவுகளும், சிங்களவரிடையே பௌத்தம், கிறித்தவம் என்னும் பிரிவுகளும் உள்ளன. இரு இனத்தவரிடையேயும் கிறித்தவம் என்னும் பொது மதம் இருப்பினும் கிறித்தவத் தமிழர்கள் கிறித்தவச் சிங்களர்வராலே இன்றுவரை தாக்கப்பட்டுக் கொண்டே வருகின்றனர். இலங்கைத் தீவு 'ஒரு நாடு' என்ற 'வலிந்து பெறப்பட்ட' அமைப்பு ஒன்பது மாநிலங்களைக் கொண்டது. அதன் விளக்கம் வருமாறு:

அட்டவணை 1

பரப்பு (சதுர கற்கள்)

இலங்கைத் தீவு மொத்தப்பரப்பு 25, 332

மேற்கு மாநிலம்	1, 432	வடமேற்கு மாநிலம்	3, 016 $\frac{1}{8}$
நடு மாநிலம்	2, 158 $\frac{3}{8}$	வடமத்திய மாநிலம்	4, 140 $\frac{1}{4}$
தெற்கு மாநிலம்	2, 146 $\frac{1}{4}$	ஊவா மாநிலம்	3, 874 13/16
வட மாநிலம்	3, 429 $\frac{3}{8}$	சப்பிரகமூவா மாநிலம்	1, 892 $\frac{1}{8}$
கீழ் மாநிலம்	3, 242 7/30		

தமிழீழம்	10, 000	(அன்றளவு)
சிரிலங்கா	15, 332	(,,)

மக்கள் தொகை வருமாறு,
(1971-இல் எடுக்கப்பட்ட கணக்கு)

அட்டவணை 2

இலங்கைத் தீவு (மொத்தம்) 12, 711, 143 — மத வாரியாக

கரையோரச் சிங்களவர்	5,445,706	பௌத்தம்	8,567,570
கண்டிச் சிங்களவர்	3,700,973	சைவம்	2,229,310

இலங்கைத் தமிழர்	1,415 567	இசுலாம்	909,941
இந்தியத் தமிழர்	1,195,368	கத்தோலிக்கம்	883,111
இலங்கை மூர்	824,291	ஏனைய கிறித்தவம்	103,576
இந்திய மூர்	29,416	ஏனையோர்	7,635
பறங்கியர்	44,250		
மலாயர்	41,615		
ஏனையோர்	13,957		

தமிழீழம் காலங்காலமாகத் தமிழ் மன்னராலேயே ஆளப்பட்டு வந்தது. 1619-இல் போர்த்துக்கேயராலே கைப்பற்றப்பெற்று 1658 வரை அவர்களாலேயே ஆளப்பெற்றது. பின்னர் 1795 வரை ஒல்லாந்தர் ஆண்டனர். அதன் பின்னராண்ட ஆங்கிலேயர் 1833-இலே தமது ஆளுமை ஏந்துக்காக தமிழீழத்தை சிறிலங்காவுடன் ஒன்றிணைத்தனர். பின்னர் 1948-ஆம் ஆண்டு பெப்பிருவரி 4-ஆம் நாளன்று இரண்டு நாடுகளையும் ஒன்றிணைத்த நிலையிலேயே விடுதலை வழங்கினர். 1972-ஆம் ஆண்டு மே மாதம் 22-ஆம் நாள் சிறிலங்காவின் ஆட்சியாளர் தமது 'ஆசைப்படி' தம் நாட்டைக் 'குடியரசு' நாடாக்கினர். தமிழீழத்தைத் தமது அடிமை நாடாக்கினர்.

தமிழனின் இன்றைய நிலை

இலங்கையிலே வாழுகின்ற தமிழர்களின் இன்றைய நிலை மிகவும் இரங்கத்தக்க ஒன்றென்பது யாவரானும் உணரப்பட்டது. அதனை மிகவும் சுருக்கமாக விளக்குவதாயின் 'ஓடுகின்ற நிலை' எனலாம். சிங்கள சிறிலங்காவிலே வாழுகின்ற தமிழர் சிங்களக் காடையராலும் கட்டுப்பாடற்ற காவற்படையினராலும் தாக்கப்பட்ட போதும் கொலை செய்யப்பட்டபோதும், தமிழ் மாதர் வீதிகளிலே கற்பழிக்கப்பட்ட போதும், தமிழர் சொத்துகள் கொள்ளையடிக்கப் பட்டபோதும், வீடுகள் தீக்கிரையாக்கப் பட்டபோதும், முதலிலே ஆங்காங்கு அமைக்கப்பட்ட ஏதிலிகள் முகாங்களை நோக்கி 'ஓடினர்'. பின்னர் அவ்விடங்களிலிருந்து புகைவண்டி, கப்பல், வானூர்தி என்பன மூலம் தமிழீழத்தை நோக்கி 'ஓடினர்'. தமிழீழத்தில் வாழுகின்ற தமிழர் அங்குள்ள காவற்படையினராலே தாக்கப்பட்டபோதும் அவர்களின் வாணிக நிலையங்கள் எரிக்கப்பட்ட போதும் அங்கும் 'ஓடினர்'. யாழ்ப்பான நகரத்திலே கடைகள் வைத்திருந்தவரான காரை நகர் (யாழ் நகரத்திலேயிருந்து வடமேற்கிலே ஏறத்தாழ இருபது கல் தொலைவிலுள்ள இடம்) போன்ற இடங்களைச் சேர்ந்த சிலர் அங்குக் கடைகளுக்குத் தீ வைக்கப்பட்டதனை அடுத்து, தத்தம்

கடைகளிலிருந்து பொருட்களைப் பேருந்துகளில் ஏற்றிக் கொண்டு தத்தமது சொந்த வீடுகளை நோக்கி 'ஓடினர்.' இவ்வாறாக எடுத்து நோக்கினால் தம் உடல், பொருள், ஆவி, கற்பு என்பவற்றைக் காப்பாற்றுவதற்காகத் தமிழன் 'ஓடிக்கொண்டிருக்கின்றான்". இதுவே தமிழனின் நிலை. இலங்கையின் தீவு எல்லையோ கடல் தான். ஆதலால் அண்டை நாடென்று கூறி ஒன்றிலே ஏதிலிகளாகத் அடைக்கலம் புகக்கூடிய நிலையிலும் அவன் இல்லை. தீவினுள்ளே ஓடியோடி ஓப வேண்டிய நிலையிலேயே அவன் உள்ளான். இவ்வாறு தமிழரின் நிலையை ஆக்கியவர்கள் சிங்கள ஆட்சியாளர்களே. மாறிமாறி ஆட்சிக்கு வரும் இரண்டு பெரிய அரசியற்கட்சிகளான சிரிலங்கா தன்னுரிமை (சுதந்திர)க் கட்சி, ஒன்றிய (ஐக்கிய) தேசியக் கட்சி ஆகியவற்றை நம்பி ஏமாறிப்போன நிலையே இவற்றுக்கான காரணம். அங்குள்ள தமிழனின் நிலை—இரவலன் நிலையே!

அழிவுறுந் தமிழர் :

மேற்படி அல்லறுகின்ற தமிழினம் கல்வி, பொருளியல், பண்பாடு, சமயம், அரசியல் ஆகிய எல்லாத் துறைகளிலுமே அழிவுற்று வருகின்றது. தமிழினத்தவரின் தொடக்கக் கல்வியிலிருந்து இறுதிவரை முழுவதுமே சிங்களவரும் எதிரிகளுமான ஆட்சியாளர்களின் கைகளிலே. தொடக்கக் கல்விக்குரிய பாடத் திட்டத்திலே தமிழர் வரலாற்றைத் திரித்தும் மறைத்தும் எழுதிச் சின்னஞ் சிறார்களின், அகக் கண்களை இளமையிலேயே 'காமாலைக் கண்களாக்க முயற்சி செய்கின்றனர். இஃது ஒருவகை அழிவு. இரண்டாவதாக நடுத்தரக் கல்வியின் பின்னர் பல்கலைக் கழக உயர் கல்வியுள் நுழையும்போது 'தரப்படுத்தல்' (Standaredization) என்ற தூணை வாசலிலே கட்டிவைத்துள்ளனர். இந்த மொழிவாரித் தரப் படுத்தல் மூலம் தகுதியும் திறமையுங்கொண்ட பலநூறு தமிழ் மாணவரின் எதிர்காலம் இருள்மய மாக்கப்பட்டது. இந்தத் தரப் படுத்தலின் உண்மையை அட்டவணை 3-இன் வழி அறியலாம். இது 1970-ஆம் ஆண்டிற்குரியது.

அட்டவணை 3

கல்வித்துறை	சிங்கள மாணவன் பெறவேண்டிய புள்ளி	தமிழ் மாணவன் பெறவேண்டிய புள்ளி
பொறியியல் துறை (பேராதனை வளாகம்	227	250

பொறியியல் துறை (கட்டுப்பெத்தை வளாகம்)	212	232
பூதவியல்	183	204
கட்டடக் கலை	180	194
மருத்துவம், பல்மருத்துவம்	229	250
கமத்தொழில், விலங்கு மருத்துவம் உயிரியல்	175	184

மேற்படி அட்டவணையிலுள்ள புள்ளிகள் நான்கு பாடங்களுக்கான மொத்தங்கள். இவ்வாறமைந்த கொடுமையால் தமிழினம் எவ்வாறு தாக்கப்பட்டதென்பதனை அட்டவணை 4, 5 ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு நோக்கினால் விளங்கும்; இவ்வட்டவணைகளிலே தேர்வான மாணவர்களின் எண்ணிக்கைகள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 4

தரப்படுத்தலுக்கு முன்னரமைந்த பல்கலைக் கழகத்திற்கான தெரிவு (1965-1970)

கல்வித்துறை	தமிழ்மொழி மூலம்	சிங்களமொழி மூலம்	ஆங்கிலமொழி மூலம்
மருத்துவம்	464	410	48
பொறியியல்	346	336	26
பொறியியல் (1970 மாத்திரம்)	94	52	7
கட்டடக்கலை	9	3	0
விலங்கு மருத்துவம்	52	21	6
வேளாண் துறை	52	65	5
பல் மருத்துவம்	39	53	7
உயிரியல், பூதவியல்	410	412	0

அட்டவணை 5

தரப்படுத்தலுக்குப் பின்னரமைந்த பல்கலைக் கழகத்திற்கான தெரிவு (1970—1976).

கல்வித்துறை	தமிழ்மொழி மூலம்	சிங்களமொழி மூலம்
மருத்துவம்	393	785
பொறியியல்	311	921
பல் மருத்துவம்	103	130
வேளாண் துறை	129	270
விலங்கு மருத்துவம்	36	97
உயிரியல், பூதவியல்	663	1,493

(தொடரும்)

தெலுங்கு இதழ் தரும் செய்தி.

இராவணன் ஆண்ட இலங்கை எங்கிருந்தது?

இரா மதிவாணன், க. மு.,

இராமாயணக்கதை நிகழ்ந்த காலத்தில் இன்றைய குமரி முனைக்குத் தெற்கே மயேந்திரமலையிருந்தது. இதனை எழுமலைத் தொடர் என்றனர். இம்மலைகளினின்றும் ஏழு ஆறுகள் பெருக்கெடுத்தோடின. கவாடபுரத்திலிருந்து பாண்டியன் நாடாண்டான். அனுமன் மயேந்திரமலை முகட்டிலிருந்து 100 யோசனை தொலைவிலிருந்த தென்னிலங்கைக்குத் தாவினன். 100 யோசனை என்பது சற்றேறப்ப 600 கல் தொலைவைக் குறிக்கும். இன்றைய இலங்கை வெறும் 30 கல் தொலைவிலுள்ளது. ஆதலால் இராவணன் ஆண்ட தென்னிலங்கை கடலுள் மூழ்கிவிட்டது என்பது வெள்ளிடைமலையென விளங்கும்.

வால்மீகி இராமாயணம் குறிப்பிடும் இதே தொலைவைச் சேதுபந்த காவியமும் சுட்டுகிறது. கணிய நூல்களில் இராவணன் ஆண்ட தென்னிலங்கை நிலநடுக் கோட்டுப பகுதியில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இன்றைய இலங்கை 5·56 பாகை வடக்கிலுள்ளது. நிலநடுக்கோடு சற்றேறப்ப 600 கல் தொலைவில் குமரிக்குத் தெற்கிலுள்ளது. கடல் கொண்ட இலெமூரியா அல்லது குமரி நாட்டின் எச்சமாக இராவணன் ஆண்ட தென்னிலங்கை இராமாயணக் காலத்திற்குப் பின்னும் இருந்தது என்றும் பின்னர் கடல் கொண்டது என்றும் அறியமுடிகிறது. கண்ணன் ஆண்ட துவரை மாநகரும் (துவாரகை) பாரத காலத்திற்குப்பின் கடலுள் மூழ்கியது. சுமத்துரை சாவகத் தீவங்களைச் சார்ந்த கிராகா சோளா என்னுந்தீவு 1872-ஆம் ஆண்டு கடல் மூழ்கிவிட்டது.

இராவணன் குமரி நாட்டுத் தமிழரின் பின்னோன் என்பதும் அவனுடைய தென்னிலங்கை நிலநடுக்கோட்டுப் பகுதியிலிருந்தது என்பதும் அறியத்தக்கனவாகும்.

[திரு. சாமனத்தி அனுமச் சாத்திரி என்பவர் 'பாரதி' மாத இதழில் (சூலை'77) எழுதிய கட்டுரையின் சுருக்கம்.]

குறிப்பு: பண்டைக்கால யவனர் மற்றும் சோனகரின் வரலாற்றுக் குறிப்புக்களில் இந்துப் பெருங்கடலில் சூரியத்தீவு இருந்தது என்றும் அந்நாட்டு மக்கள் நாகரிகம் வளர்ந்த செல்வ வாழ்வினர் என்றும் அந்நாட்டில் நிழல் சாய்ந்து விழுவதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. இதனைக் கோந்தர கோவ் என்னும் உருசிய நாட்டு வரலாற்றாசிரியர் 'The Riddles of three Oceans' என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

செய்திகள் (பொது)

ஊர்நல அலுவலர்கள்!

கிராம சேவக்குகளின் இப்பொழுதுள்ள பதவிப் பெயரை ''ஊர்நல அலுவலர்' என மாற்றியமைத்துத் தமிழ்நாடு அரசு கட்டளையிட்டுள்ளது.

'ஸ்ரீ'க்குப் பகரமாகத் திரு'

ஸ்ரீபெரும்புதூர், ஸ்ரீவில்லிப்புத்தூர், ஸ்ரீவைகுண்டம், ஸ்ரீரங்கம் ஆகிய ஊர்களின் பெயர்களில் உள்ள முதல் எழுத்தான ஸ்ரீ என்பதற்குப் பகரமாக திரு என்று சேர்த்துத் திருப்பெரும்புதூர், திருவில்லிப்புத்தூர், திருவைகுண்டம திருவரங்கம் என்று மாற்றியமைக்கும்படி அ.தி.மு.க. அரசு பதவியேற்றதும் நடுவணரசு உள்துறை அமைச்சகத்திற்குக் கருத்துத் தெரிவித்து எழுதியுள்ள தாகக் கடந்த சட்டமன்றத் தொடரில் அரசு தெரிவித்துள்ளது.

தமிழ் ஓங்கி வளர்ந்த ஒரு மலை!

தமிழ்மொழி ஓங்கி வளர்ந்த ஒரு மலை போன்றது என்றும், இந்தி உள்பட வேறு எந்த மொழியையும் அதன்மீது திணிக்க முடியாது என்றும், பாவோகி சுத்தானந்த பாரதியார் பிறந்த நாள் விழாவில் 10—12—77 அன்று சென்னையில் தமிழ்நாடு ஆளுநர் பிரபுதாசு பட்வாரி கூறினார்.

தென்மொழி இயவம். கோவை!

கோவையில் புதியதாகத் தொடக்கப்பெற்ற தனித்தமிழ் இயக்க மாகிய 'தென்மொழி இயவம்' தன் முதல் வினையாக, 'பெயர்ப் பலகைத் தூய தமிழ்ப்படுத்த' ஊர்வலத்தைக் கடந்த தி.பி. ௨00௮, துலை, ௫—(22—10—77)-இல் நடத்திக்காட்டியது. ஊர்வலத்தில் தென்மொழி இயவ அமைப்பாளர் தென்மொழி அரங்கத் தமிழ்மணி' தென்மொழி மறை. நித்தலின்பனார் (கோவை), தென்மொழி ந. முத்துக் குமரன் (பல்லடம்), தென்மொழி ப. துரையரசன் (அவிநாசி), புலவர் அறிவுடை நம்பி, ஓவியர் கொங்கிளங்கோ, கோவைக்கானல்; சி. ப. கலைமாணிக்கம், தமிழ்மாணிக்கம், சிவலிங்கம், மாணவர் தம்பி இரவீந்திரன், முதலியோர் கலந்து கொண்டு, ஊர்வல முடிவில் நடந்த கருத்து விளக்கக் கூட்டத்தில் பேசினர். ஊர்வலத்தின் பொழுது 'தமிழ்நாட்டு வணிகர்களே—தமிழ்மொழியில் எழுதுங்கள், தாய்த் தமிழ்நாட்டில்—தமிழுக்கே முதலிடம். கன்னித்தமிழ்நாட்டில்— கலப்புத்தமிழ் வேண்டாம், பெயர்ப் பலகைகளைத் தனித்தமிழில்

எழுதுங்கள், இனிக்குமா இனிக்குமா—தமிழன் காசு இனிக்குமா?, கசக்குமா, கசக்குமா—தமிழ்மொழி தான் கசக்குமா?—கலப்பு மொழி இதழ்களைக் கொளுத்துவோம் கொளுத்துவோம், பாலியல் ஏடுகளைப் படிக்காதீர் படிக்காதீர்!, போன்ற முழக்கங்களை இட்டனர். இறுதியில் அவர்களின் வேண்டுகோள் தீர்மானப்படியை நகராட்சி அலுவல் அதிகாரியிடம் சேர்ப்பித்து நடவடிக்கையெடுக்கக் கோரினர்.

தமிழக ஈழ நட்புறவுக் கழகம்.

கடந்த 25—12—77 ஞாயிறன்று தமிழக ஈழ நட்புறவுக் கழகம் தன் தொடக்க விழாவை, சென்னை, மயிலாப்பூர்—இராயப் பேட்டை நெடுஞ்சாலையிலுள்ள 96/2 எண் கட்டடத்தில் நடத்தியது. தமிழக—ஈழ மக்களிடையே நல்லுறவையும் கலை, பண்பாட்டையும் வளர்க்கும் நோக்கத்துடன் தொடங்கப்பெற்ற இக்கழகத்திற்குத் தலைவராக முனைவர் இரா. இளவரசு, க. மு. அவர்களும், துணைத் தலைவராக புலவர் பண்பழகனும், பொதுச் செயலராக ந. அரண முறுவல். கீ.சு, அவர்களும், துணைப் பொதுச்செயலராக சேலம். பாவரசும், பொருளாளராக ஓவியப்பாவலர் மு. வலவனும் தேர்ந் தெடுக்கப் பெற்றுள்ளனர். ○

திட்டங்கள் போடுகிறோம்! செயல்படுத்துகின்றோமா?

தமிழில் பெயர்ப் பலகைகள் அரசு முடிவு என்னாயிற்று?

தமிழ்நாட்டில் உள்ள கடைகள், நிறுவனங்கள், மற்றும் உணவகங்களில் தமிழில் பெயர்ப் பலகைகள் வைக்கப்பெற வேண்டு மென்றும், தமிழைத்தவிர வேறு எந்த மொழிகளில் பெயர்ப் பலகைகள் எழுதப்பெற்றாலும் அம்மொழிகளின் பெயர்களைத் தமிழ்ப்பெயர் வரிகளுக்குக் கீழேதான் எழுதவேண்டும் என்றும், தமிழக அரசு கடந்த ஆகத்து மாதம் அறிவித்ததுடன் அன்றி, அதற்கொப்ப 1948-ஆம் ஆண்டு, தமிழ்நாடு—கடைகள், மற்றும் நிறுவனங்கள் பற்றிய நெறிகளையும், 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு—உணவகங்கள பற்றிய நெறிகளையும் திருத்தியமைத்தும் அந்நெறிகள் கடந்த 1977-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் பக்கலிலிருந்து செயலுக்கு வருமென்றும் கட்டளையிட்டது.

சிறப்பான அத்திட்டம் செயல்படுத்தப் பெறுகிறதா என்பதைக் கண்டறியுமாறு, தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சகத்திற்கு நினைவு படுத்துகின்றோம்!

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்க முதல் கருத்தரங்கில் கலந்து கொள்ள தலைநகருக்கு வந்திருந்தேன். அந்நாட்களில் பலநாடுகளைச் சேர்ந்த தமிழர்களைப் பார்த்து உரையாட வாய்ப்புகள் கிட்டின. அவர்களெல்லாரும் தங்கள் பேச்சினூடே அயன்மொழிச் சொற்களைத் தமிழகத் தமிழர்கள்போல் கலவாமல் இயன்ற அளவு தனித்தமிழில் பேசியது பெருமகிழ்வைக் கொடுத்தது. அவர்களோடு தங்கி இருந்த அந்த நான்கு நாட்களில், தமிழகத் தமிழர்கள் தாம் தமிழ்மொழியை எவ்விளவில் கலப்பட மொழியாக்கி விட்டார்கள் என்பதை உணர முடிந்தது. பின்னர், ௬-ஆம் நாள் உ. த. ப, இயக்கப் பேராளர்களைப் பாராட்டிப் பெரியார் திடலில் நடைபெற்ற விழாவில் தாங்கள் கலந்து கொண்டு ஆற்றிய உரைமிகச் சிறப்பாக இருந்தது. அங்குப் பெருமளவில் கூடியிருந்த மக்கள் தங்கள் உரையை அவ்வப்போது கையொலி எழுப்பி வரவேற்றது. தனித்தமிழ் உணர்ச்சி மெல்லத் தலையெடுக்கத் தொடங்கிவிட்டது என்பதற்கு அறிகுறி என்றே நான் மனமார நம்புகிறேன்.

தமிழன் இன்று தமிழகத்தில் தமிழ் உணர்ச்சி, இனஉணர்ச்சி அற்றுவாழும் நிலை; 'தமிழன்' என்று வெளிப்படையாகச் சொல்லக் கூட மறுக்கும் நிலை; நமது அன்றுட வாழ்வில் எந்த அளவில் அயல் மொழிகள் ஆளுமை பெற்றுள்ளது; பெறவிட்டுள்ளோம் என்பதற்கு, 'என்னங்க சார், எப்படி இருக்கிறீங்க? சௌக்கியமா!' என்றும் நம்மைச் சார்ந்தவர்களைப் பிறருக்கு அறிமுகப் படுத்தும்போது 'இவர் என் பிரதர்'; 'இவள் என் சிஸ்டர்'; இவள் என் வொய்வு (Wife) என்றும்; செந்தாமரை, மலர்க்கொடி, போன்ற தமிழ்ப் பெயர்களை விடுத்து உஷா, நந்தினி, உமா என்ற பெயர்களை வைப்பது போன்ற இன்னோரன்ன கருத்துகளை எடுத்துக்காட்டுகளுடன் தாங்கள் ஆற்றிய உரை மிகச்சிறப்பாக இருந்தது. தந்தை பெரியார் ஆற்றிய பெரும் பணியை நினைவூட்டி, இந்திராவின் நெருக்கடி காலக் கொடுமைகளைச் சொல்லி, தமிழன் பண்பாடு நாகரிகம், எழுச்சி இவற்றை அழிக்க நடைபெறும் முயற்சிகளை சுட்டிக்காட்டி, உலகில் உள்ள மிகச் சிறந்த மொழிகளுள் தமிழ் தலையாய இடத்தைப் பெறுகின்ற தன்மையை அறிஞர்களின் ஆய்விலிருந்து எடுத்துச்சொல்லி, இந்தியப் பல்கலைக் கழகங்களில் தமிழ் ஒதுக்கப்பட்டுள்ள நிலையைக் குறிப்பிட்டுக் காட்டி ஆற்றிய முழு உரையுமே நன்கு வரவேற்கப்பட்டது. இந்த முழு உரையையும் ஒலிப்பதிவு செய்து வந்தது இங்குப் பயனுள்ளதாக உள்ளது. — வில்லவன்கோதை, பூளைமேடு-641004.

0:564: பெருமதிப்பிற்குரிய பாவலர் ஐயா வணக்கம். 'தென் மொழி' சுவடி 14, ஓலை 5-6-இல் பாவலர் கருமலைத் தமிழாழன் அவர்கள் விளம்பரப் பலகைகளில் தமிழில் எழுதவேண்டுமென்ற அரசுக்கட்டளை பற்றிக் குறிப்பிட்டிருந்தார். இது குறித்து ஒரு சில செய்திகள் தங்களுக்குத் தெரிவிக்க அவாவுகிறேன்.

அரசும் பொறுப்பிலுள்ள போக்குவரத்துக் கழகங்களில் ஊர்ப் பெயர்களும், போக்குவரத்துக் கழகங்களின் பெயர்களும் தமிழில் எழுதப்பட்டிருந்தன; அண்மைக் காலங்களில் இம்முறை அடியோடு மாறி ஆங்கிலம் எல்லா இடங்களிலும் நிறைந்து விட்டது.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் அழகாகத் தமிழில் 'கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்' என எழுதப்பட்டு வந்தது மாறி இன்று இருபக்கங்களிலும KTC என்று வண்ணத்தில் எழுதப்பட்டுவிட்டது. அத்தோடு பல வண்டிகளின் முன்புறமும் இவ்வெழுத்துகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் பேருந்துக் கொட்டகைகளின் பெயர்களைக்குறிப்பிடவும் தமிழ் எழுத்துகள்தாம் பயன்படுத்தப் பட்டு வருகின்றன, எ. கா. ராணித்தோட்டம் (ரா), கன்னியாகுமரி

(க). படந்தாதுமூடு (ப). இது இன்னும் ஆங்கிலக்காரர்களின் கண்களில் படவில்லை போலும்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் முன்பு இருபுறமும் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் என எழுதப்பட்டு வந்தது கைவிடப்பட்டு வருகிறது. புதிதாக முன்புறம், கண்ணாடிக்கடியில் Pandyan என்ற மாழை எழுத்துகள் பொறிக்கப்படுகின்றன. புதிய வண்டிகளில் PRC என்று ஆங்கிலத்தில் அழகுற எழுதப்பட்டிருக்கின்றன,

சோழன் போக்குவரத்துக் கழகத்திலும் முன்பு முகப்பில் சோழன் என்று எழுதி வந்ததை மாற்றி CRC என்று எழுதிவிட்டனர். பக்கத்திலும் அதே போன்று எழுதிவிட்டனர். முன்புறம் பாண்டியன் போன்று Cholan என்ற மாழை எழுத்துகள் இடம்பெற்று வருகின்றன. கொட்டகைப் பெயர்களும் திருத்துறைப்பூண்டி (TTP), மன்னார்குடி (MNG) என்பவை போன்று எழுதப்பட்டு வருகின்றன.

பாண்டியனில் பெரியகுளம், போடி போன்ற நாட்டுப்புற நகர்களுக்குச் செல்லும் வண்டிகளிலும் ஊர்ப் பெயர்கள் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கின்றன; அண்ணா, பெரியார், சேரன், போக்குவரத்துக் கழக நிலைமைகள் தெரியவில்லை.

பல்லவனில் மட்டும் இன்னும் இந்தத் தமிழ்ப் பகைப்போக்கு தலையெடுக்கவில்லை. எனவே தனியார் விளம்பரப் பலகைகளில் தமிழைக் கொண்டு வர எண்ணும் அரசுக்கு அதன் நிழலில் நடைபெறும் இம் மொழிப்பகைத் திட்டத்தை முறியடிக்குமாறு வேண்டுகோள் விடுக்க வேண்டுகிறேன். —செ. கரிகாலன், பெரியகுளம் மதுரை மா. வ.

0:565 மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். ஒவ்வொரு தென்மொழி இதழிலும் தமிழனுடைய நிலை தாழ்ந்து போவதையும், அதற்குத் தமிழர்களாகிய நாம் என்ன செய்யவேண்டும் என்பதையும் எடுத்துக் கூறிக் கொண்டு வருகிறீர்கள். இருப்பினும் இம்மாத இதழில் (சு-14, ஒலை-7) வந்துள்ள அட்டைப்படம் தமிழனுடைய நிலையை "உள்ளங்கை நெல்லிக்கனி" போலத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. அப் படத்திலே அடங்கியுள்ள கருத்துகளை நோக்கும்போது தாழ்வுற்றுப் போகின்ற தமிழன் சிறப்பானதோர் இடத்தை அடைய வேண்டுமானால், முதலில் தமிழனுக்கு என்று ஒரு தனிநாடு அமைத்தாகவேண்டும், என்பது என்னுடைய திட்டவட்டமான கருத்து என்பதை தங்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய நடுவண் அரசாலும், மாநில அரசாலும் எந்த வகைப் பயனும் தமிழுக்கோ அல்லது தமிழனுக்கோ ஏற்படவில்லை; ஏற்படாது என்பதும் ஆட்சி செய்து வருகின்ற ஆட்சியாளர்களின் செயல்களிலிருந்து தெரியவருகிறது. ஆகவே தனித் தமிழ்நாடு அடைவதற்கு தங்களைப் போன்ற ஆற்றல் மிக்கவர்களின் தலைமையின் கீழ் எந்த வகை ஈகமும் செய்ய அணியமாக இருக்கின்றேன். தங்களுடைய முயற்சி தொடரட்டும்; தமிழன் நிலை உயரட்டும்.

—ப, தமிழ்நெஞ்சன், திராவிட இளைஞர்பாசறை தேவத்தூர்.

0:566; தேன்சிந்தும் தென்மொழியே! தெவிட்டாத தெள்ளமுதே! என்னவுன் நிலை என்று, ஏங்குகிறேன்! இன்று என் செய்வேன்? என் பணியோ நாட்டுக்கடன்; எவர்க்குரைப்பேன்-என் நிலையை? இருந்தும் உனை அணுகுகிறேன்! எனை ஏற்றுக் கொள்க. உறுப்பினராய் ஆக்கிக் கொள்க! உரியதொகை ஓராண்டிற்கு உடனடியாய் உனக்கே அனுப்புகிறேன். —சாமி. குழந்தைவேலன், வான்படை நிலையம். பத்தான்கோட்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005 (தமிழகம்).